சமாதானம் வேண்டுமானல்

உயிரைக் காப்பாற்றுங்கள்.

பக். 22

பாணின் விலையும்

படிதாண்டி யாச்சு

பலரது வாழ்வும்

பறிபோக லாச்சு. பக். 6

# தொண்டன்

ஆரம்பம்: பெப்ரவரி - 1969

அன்பு என்ற அந்தப் புனித உணர்வுக்குத் தடைபோடாத பெரியமனம் இருந்துவிட்டால் வாழ்க்கையில் வேதனை என்பதே இருக்காது.

பக். 9

ஒவ்வொரு இரவும் இருட்டும் போது ஒரு பயம்; இருண்டு விட்டால் இரவு அவளைக் கொலை செய்துவிடும் என்பது போல...

பக். 17

1989
ஒக்டோபர்

4/50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஒக்டோபர் - 1989

மலர்: 21 இதழ்: 08

ஆசிரியர்;

கிங்ஸ்லி ஞெபட்

இணை ஆசிரியர்:

மலர்வேந்தன்

ஆசிரியர் குழு:

எஸ். லோகநாதன்
ஏ. ஜி. இராஜேந்திரம்
பி. ஜோசப்

வெளியீடு:

சமூகத் தொடர்பு நிலையம்,
திரு./ மட். மறை மாவட்டம்.

தொடர்பு:

சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண்: 44,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. Box - 44,
BATTICALOA.

விலை:

தனிப்பிரதி ரூபா 4/50
ஆண்டு சந்தா ரூபா 50/-

உள்ளே...

1) எமது குரல் ... ... 1
2) தமிழ் எழுத்துக்களில் ... 2
3) இளைஞர் அரங்கம் ... 3
4) அச்சுத் துறையும்... ... 4
5) கவி ஆரம் ... ... 6
6) என் வீட்டைத்... ... 8
7) விமர்சனத்தில் நடுநிலை... 12
8) சந்தனச் சிதறல் ... 17
9) மாணவர் பக்கம் ... 20
10) நீதியின்றிச் சமா... ... 22
11) கிறிஸ்தவ ஒழுக்க நெறி... 23
12) 100 ஆண்டு கண்ட... ... 26
13) விவிலியப் புதிர் ... 31



கடவுளின் அரசைப் பற்றிய
நற்செய்தியை அறிவித்துக்
கொண்டே இயேசு ஊர்
ஊராகச் செல்லலானார்.

லூக் 8 / 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எமது குரல்

ஐப்பசித் திங்கள் என்றவுடன் 'மறை அறிவிப்பு பற்றிய சிந்தனை நமக்கு வருவதுண்டு. ஏனெனில் இம்மாதத்தில் மறை அறிவிப்புப்பணி பற்றியும், மறைபோதகர்களைப் பற்றியும் நாம் சிந்தித்து இப்பணி சிறப்புற ஆசிப்பதும், இறைவனிடம் மன்றாடுவதும் ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய கடமையாகும்.

எமது மறையை அறிவிக்கக் கடந்த காலங்களில் பலர் முன்வந்தனர். இவர்களின் வாழ்க்கை முறையும் அவர்களின் செயல்திறனும் எமக்குப் பசுமை நிறைந்த பழையகால நினைவுகளைக் கொணரத் தவறுவதில்லை. நாட்டைப் பிரிந்து, சொந்தங்களைப் பிரிந்து, இலகுவான உல்லாச வாழ்வைத் துறந்து எமது நாடுகளுக்கும், ஊர்களுக்கும் வந்து தாராள மனத்துடன் பணி புரிந்த ஏராளமான 'வெளிநாட்டுக்' குருக்கள் எம் மனக்கண்முன் நிற்கின்றனர். பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து இங்கு வந்து நமக்குக் கைகொடுத்துத் தூக்கிவிட்டவர்களை சுலபமாக மறக்கமுடியுமா! கிறிஸ்தவர் அல்லாத சகோதரர்கள் கூட இவர்களின் சேவையைப் புகழ்ந்து பேசுவதை இன்றும் நாம் கேட்க முடிகின்றது. இறைவனின் அன்பை, பராமரிப்பை நாம் நன்கு உய்த்துணர இவர்கள் உகந்த கருவிகளாக இருந்தனர். ஏன், எதற்காக இவர்கள் தம் சொந்த பந்தங்களைத் துறந்து எம் வறுமை நிலையில் வாழ முற்பட்டனர்? இவ்வினாவை நம்மில் பலர் எழுப்பலாம். ஆம், இச்செயலே இறைவனின் அருங்குறியாகும். மனித வரலாற்றில் இறைவன் தனது அன்பை, பராமரிப்பை எமக்குக் காட்ட உபயோகிக்கும் அரியநேரர் அருங்குறியாகும். இவர்கள் நம்மைப் போல் பலவீனர்களாயிருந்தும், இறைவன் அவர்களை அழைத்து, அருட் கொடைகளால் நிரப்பி, கஷ்டமான பணியை தொடர்ந்தாற்ற அவர்களைத் தெரிந்தெடுத்தார்.

திருச்சபையின் வரலாற்றில் இப்படிப்பட்டவர்களின் பட்டியலுக்கு முடிவே இல்லை. இன்றும் இப்பணி வாழ்வுக்கு இறைவன் பலரை அழைக்கின்றார்.

இந்த உண்மை நிலைக்கு நமது பங்கு என்ன? இன்றைய காலகட்டத்திலே தேவ அழைத்தலுக்குத்தம் பிள்ளைகளை அர்ப்பணிப்பதும், அவர்களுக்கு ஊக்கம் கொடுப்பதும் வரவேற்கத்தக்க ஒன்றாக இல்லை. இது வேதனைக்குரிய விடயமாகும். ''இன்று அனைத்துலகத் திருச்சபை எதிர் நோக்கும் சவால் பல்வேறு நிலைகளில் குருக்களாக, கன்னியராக, பொது நிலையினராக - நிறைவேற்றப்படும் தேவ அழைத்தல் பற்றியதாகும்'' என திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வுலகின் லௌகீக போக்கு, மேலைநாடுகளில் தேவ அழைத்தலை மிகவும் பாதித்துள்ளது. இன்றில்லாவிட்டாலும், இதே நிலை நமக்கும் வர சாத்தியக்கூறுகள் உண்டு. எனவே, தேவ அழைத்தலுக்காக மன்றாடுவது மட்டுமல்லாமல் இவ் வாழ்க்கையைத் தழுவ முன்வரும் நம் பிள்ளைகளை உற்சாகமூட்டி, ஊக்குவிப்பதும் நமது கடமையாகும்.

திருமுழுக்கினால் நாம் அனைவரும் 'மறை அறிவிப்போர்' என மாற்றப்பட்டுள்ளோம். இது, விசுவாசத்தை வாழ்வதோடு நின்றுவிடாமல் அதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதிலும் தங்கியுள்ளது.

எனவே மறைஅறிவிப்புக்காக, அழைத்தலுக்காக செபிப்போம். எமது பிள்ளைகளுக்கு உற்சாகமூட்டி, ஆதரவு கொடுப்போம். எமது நாட்டில் மட்டுமல்ல, பிறநாட்டிலும் அவர்கள் சேவை வளர ஆசிப்போம்.

**கிங்ஸ்லி றொபட்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழ் எழுத்துக்களின் அழகு

**கனடாவிலிருந்து க. தா. செல்வராஜகோபால்**

கண்ணையும் கருத்தையும் கவர்ந்து என்றும் சிந்தனையிற் செறிந்து நிற்பது எதுவோ அதுவே அழகு என்பது எனது எண்ணம். அவ் அழகு பலருடைய சிந்தையிற் சேருமானால் அந்த அழகு நிலைப்படுத்தப்பட்டு விடுகின்றது. அப்படிப்பட்ட அழகுக்கு அழகு செய்ய வேண்டியது அவசியமின்று. அதுபோல அழகைக் குறைத்து விடுவதும் தேவையற்ற காரியமாகும்.

நேர்கோடுகளும் வளைகோடுகளும் அழகான உருவங்களை உண்டாக்குகின்றன. உயர்ந்து பணிந்து செல்கின்ற ஒலி எப்படிக் காதுக்கினிய கானத்தை உண்டாக்குகின்றதோ அதுபோல் வளைந்து சுருண்டு வடிவாக நிமிர்ந்து செல்லும் கோடுகளால் ஆக்கப்படும் உருவமும் கண்ணைக் கவர்ந்து களிப்பை ஊட்டுகின்றன.

தமிழ் எழுத்தின் அழகு எனும்போது மேற்கூறிய கருத்துக்கள் நமது மனதில் எழுவது இயல்பு. மற்ற மொழிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நேர்கோடுகளும் வளைவுகளும் நெளிவுகளும் சுழிகளும் அளவுக்கு அளவாகக் கலந்து அழகு தந்து நிற்கும் எழுத்து தமிழ் எழுத்தே என்பது புலனாகும். ஏனைய மொழி எழுத்துக்களில் இத்தகைய அமைப்பு மிகக் குறைவாக இருக்கின்றன என்பதை நாம் அவற்றைத் தமிழுடன் ஒப்பு நோக்கும் போது காணலாகும். சதுர எழுத்துக்களும், வட்டெழுத்துக்களும் கண்ணெழுத்துக்களும் கலந்து அழகு தருவதில் வேறு எம்மொழியும் தமிழுக்கு ஈடாகி விடாதென்பது உறுதி.

அதிலும் னா, றா. ணா, லை, ளை, னை எனும் எழுத்துக்கள் தமிழ் மொழியின் அழகை மாத்திரமல்ல தமிழ் எழுத்துக்களின் முதிர்ந்த வளர்ச்சியையும் எடுத்துக்காட்டுவன. எழுத்துச் சுருக்கம் என்பவற்றின் நிலையாக நிற்பன. அப்படிப்பட்ட ஆதி அழகை நாம் சிதைப்பதா? இயந்திர நுட்பமயப்படுத்துவதற்காக இச்சிதைவு அவசியமற்றது என்பது சாதனைப் படுத்தப்பட்ட பிறகும் சிலர் சீர்திருத்தமெனும் போர்வையிற் சிதைக்க முயல்வதைக் குறிக்கவும் அத்தகையோரை அழைக்கவும் எந்தத் தமிழ்ச் சொல்லைப் பாவிக்கலாம்?

தமிழில் வெளிப்படையாக எடுத்தும் படுத்தும் ஒலிக்கும் முயற்சியின்றிப் பிறமொழியில் உள்ள சில ஒலிகளையோ அவற்றின் குறியீடுகளையோ எடுத்தாள வேண்டுமானால் வடவெழுத்துக்களைப் போல தமிழ் எழுத்துக்களாலான வேற்றுரு அமைப்பை ஆக்கலாமே தவிர இன்னுமின்னும் தமிழில் உள்ள எழுத்துக்களைக் குறைக்கவோ அல்லது சிதைக்கவோ முயலவேண்டிய அவசியமின்று என்பதைக் கொள்கையளவில் மாத்திரமின்று. செயலளவிலும் நிலைநிறுத்திக் காட்டிய பின்னர் தமிழார்வலர்கள் ஏற்றுக் கொள்வார்களாக.

---

ஒழுக்க முள்ளவராக இருந்ததால் இந்த உலகில் அனைத்து நல்ல செயல்களையும் செய்ய முடியும். எல்லா வழிகளிலும் நீங்கள் செல்ல முடியும். எல்லா இடங்களிலும் உங்களைப் பார்க்க முடியும் எல்லா நேரங்களிலும் உங்களால் நல்லது செய்ய முடியும். பலதரப்பட்ட மக்கள் உங்களுக்கு உதவி செய்ய முடியும். ஒழுக்கமுள்ளவராக இருந்ததால் இறக்கும்வரை எல்லாப் பெருமைகளையும் பெறவும், தரவும் உங்களால் முடியும்.

**ஜான் வெஸ்லி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பிரிவினை

உலக நாடுகள் அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பிரித்தாராய்வுக்கு உட்படுகின்றபோதிலும், நாடுகளுக்கிடையே, பிராந்திய அடிப்படையிலே,

- நிறப்பிரிவினை - சமயப்பிரிவினை மேலும் வலுப்பெறுகின்றனவாகவும்,
- மொழிப்பிரிவினை - இனப்பிரிவினை ஆகியன இன்னும் கருத்து வேறுபாடுகளையும் வளர்ப்பனவாகவும்,
- சாதிப்பிரிவினை சமூகங்களுக்கிடையே பிளவுகளையும் - பூசல்களையும் தோற்றுவிப்பன வாகவும் இன்றும் அமைந்திருப்பதை அவதானிக்கும் போது வேதனையும் விரக்தியும் ஏற்பட்டுபலர் சமூகங்களிலிருந்து ஒதுங்கிவிடுவதை நாம்அன்றாடம் அனுபவிக்கின்றோம்.
- பணத்தால்
- கல்வியால்
- தொழிலால்



## இளைஞர் அரங்கம்

சமூகங்களில் மக்கள் தம்மை உயர்த்தியும் - தாழ்த்தியும் நோக்கும் இயல்புகளும் இன்றும் பெருகி வருகின்றன. நகரங்களில் சொத்துடமை - நாகரீகம் - உயர்பதவி ஆகியன மக்களை பிரிக்கும் அம்சங்களாக அமைகின்ற அதேவேளை, இன்னும் கிராமங்களில் சாதி - குலப் பிரிவினைகள் மேலும் - மேலும் நிலை நிறுத்தப்படுகின்றன.

சமய அமைப்புக்களும், ஆன்மீகத்தலைவர்களும் கல்விமான்களும் இச்சாதி - குலப்பாகுபாட்டை முதன்மைப்படுத்தி மக்களைப் பராமரிப்பது அதிகரிக்கின்றதே தவிர - அருகுகின்றதாக இல்லை. அவரவர் தொழிலின் பொருட்டு சாதிப்பகுப்பு ஏற்பட்டது எனக் கூறப்பட்ட போதும் -

நாம் - அவர்களது நடத்தைகளால்

அவர்களது அறிவு - அனுபவங்களால் - மக்களை இனம் காண்போம் - வழி நடத்துவோம்.

எம் மண்ணில் நிலவும் ஒற்றுமையின்மைக்கும். உயர்வின்மைக்கும் - அடிமைத்தன்மைக்கும் - விரக்தி மனப்பான்மைக்கும், பழி வாங்கல்களுக்கும் காரணம் இச்சாதிப்பிரிவினை தான் என்பதை உணர்வோம். இன்றைய இளைஞர்கள் நாம் இக்கொடிய நோயின் மட்டில் விடுபட்டு,

''சாதி இரண்டொழிய வேறு

இல்லை சாற்றுங்கால்'' எனும் முதுமொழிக்கு அமைவாக வாழ முற்படுவோம் என அன்புக்குரல் கொடுப்பது.

**கலையுலகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தொடர்ச்சி - 3

# அச்சுத்துறையும் எமது (பிர)தேச வெளியீடுகளும்

— எஸ். லோகநாதன் —

## சஞ்சிகைகள் :-

கிழக்கு மாகாண வெளியீடுகள் பொது வாகத் தொடர்ச்சியற்றனவாகவும் சில இதழ் களைத் தந்தபின் தூங்கி விடுபனவாகவும் அமைந்திருந்தவை என்பதை கடந்த கால வெளியீட்டாளர்களும், வாசகர்களும் ஏற்றுக் கொள்வர்.

வட மாகாணத்திலிருந்து வெளியாகும் மல்லிகை, புதிய உலகம், நான் ஆகிய சஞ்சி கைகள் போன்று தொடர்ச்சியான வெளியீடு களை எமது கிழக்குப் பகுதி வெளியீட்டாளர் கள் தருவதில்லை. தொண்டன் சில மாதங்க ளில் வெளிவராவிட்டாலும் இணைப்பு வெளி யீடாக, வெளியிடப்படும் சஞ்சிகை எனக் கொள்ளலாம்.

ஞாயிற்றுக் கிழமைக்குரிய தினகரன் வார மலரில், நாம் ஓர் அம்சத்தைத தெளிவாக அவதானிக்கலாம். ''இலக்கிய உலகம்'' எனும் பகுதியை நோக்கும் போது எவ்வளவு கையெழுத்துப் பிரதிகள், கல்லச்சு வெளி யீடுகள், அச்சுச் சஞ்சிகைகள் வெளியிடப் படுகின்றன என்பதை நாம் தெரிந்துகொள் ளலாம். எம் நாட்டின் தமிழ் சஞ்சிகை களுக்குரிய ஒரு சிறப்பு எதுவெனில் அவை, அவ்வப் பிரதேசங்களில் மாத்திரம் தமது இலக்கியத்தை, சிறப்பை, செய்தியை வழங்கு வதேயாகும்.

எடுத்துக்காட்டாக யாழ்நகரிலிருந்து இரு மாதங்களுக்கு ஒரு தடவை வெளி வரும் ''நான்'' எனும் உளவியல் சஞ்சிகையை கிழக்கு மாகாண வாசகர்களுக்குத் தெரியாது. அதேபோன்று மட்டுநகரிலிருந்து வெளியாகும் ''தொண்டன்'' மாதாந்த சஞ்சிகைபற்றி அதிகளவில் வடக்கு மாகாண வாசகர்களோ கிழக்கு மாகாணத்திலுள்ள கிறிஸ்தவர்கள் அல்லாத வாசகர்களோ அறியாதிருக் கின்றனர்.

சிங்கள மொழியிலே வெளியிடப்படும் ஒவ்வொரு வெளியீட்டைப் பற்றியும் ஒவ் வொரு சிங்கள மக்களும் - வாசகர்களும் அறிந்திருக்கின்றனர் என்பது உண்மை. அதேவேளை ஒவ்வொரு நோக்கங்களுக்காவும், இரு பாலாருக்காகவும், ஒவ்வொரு வயதின ருக்காகவும் சிங்கள மொழியிலான சஞ்சிகை கள் வெளியிடப்படுகின்றன. தேசத்திய, ராவய, சிறி, கல்பனு, இசுர, விவரண, முத்துஹர, வினிமய என்பன பொதுவாக எல்லோரும் படிக்கத் தக்க சமூகப், பொரு ளாதார, அரசியல் அம்சங்களைத் தழுவியதாக வெளியிடப்படுகின்றன.

கல்விச் சஞ்சிகைகளாக சத்தர, விதுரென, விதுரஸ, விதுசுர, ஆர்த்திகய ஆகியன வெளி வருகின்றன. இவற்றில் அதிகம் பத்திரிகை அமைப்பிலும் மாதாந்தம் வெளிவரும் சஞ்சி கைகளாகும். க. பொ. த. சாதாரண, உயர்தரப் பரீட்சைகளுக்குரிய அனைத்து கற்கை நெறிகளையும் உள்ளடக்கி வெளியிடப் படுகின்றன.

உள்ளத்திலும், உரையாடலிலும் சத் தியம் குடி கொண்டிருந்தால், சத்தி யத்தின் முத்திரை படிந்தால் வாழ்க் கையில் எதிர்ப்படும் இன்னல்கள் அனைத்தும் அகலும்.

**குருநானக்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சித்திரக் கதைகளைக் கொண்ட சஞ்சிகைகளாக, சித்தர, மதுர, சந்சிரி, சத்துட, ஹிநவத்த, தசுன, ரசிக ஆகியனவும் இளம் பெண்களுக்காக வனிதா, வித்தி, சிரிகத்த, தருணி, யுவதி, குமரி, யொவுன், ஜனதா, சுரெலிய, விலாசித்தா, சுரசிலி ஆகிய சஞ்சிகைகளும் வெளியிடப்படுகின்றன. இவற்றில் அதிகம் சிங்களச் சினிமா அம்சங்களை உள் அடக்கி வெளியிடப்படுகின்றன. சினிமாத் துறையை மாத்திரம் வெளிப்படுத்துவனவாக சரசவிய, திரதரு, தருனயா, சரசி, என்பனவும் வெளியிடப்படுகின்றன.

சிறுவர்களுக்காகவும், சில சஞ்சிகைகள் வெளியிடப்படுகின்றன. மிஹிர, விஜய, சுரதலா, ஹந்தமாமா, சூகிரி, மீப்பனி. ஆகியன இவற்றில் அடங்கும். இவைகளை விடவும் பல சஞ்சிகைகள் வாராந்தம், மாதாந்தம், வெளி வந்து கொண்டே இருக்கின்றன.

மேல் வந்தவைகள் அனைத்தும், நாடளாவிய ரீதியில் வினியோகிக்கப்படுகின்றன. சிங்கள மொழியில் வெளியிடப்படும் ஒரு 'சஞ்சிகையைப் போன்று இன்னும் தமிழ் மொழியிலான ஒரு சஞ்சிகை தமிழ் மொழி தெரிந்த மக்கள் (வாசகர்கள்) தெரிந்து கொள்ளத் தக்கவகையில் வெளியிடப்படுவதில்லை என்பதை, இங்கு குறிப்பிட வேண்டும். எண்ணிக்கையைப் பொறுத்ததல்ல, இந்தநாட்டில் வதியும் தமிழ் வாசகர்கள் அனைவரும் அறிந்துள்ளார்களா என்பதை வினவுவதே எமது ஆய்வாகும். ஏன் என்பதற்குத்தான் நாம் விடைகாண வேண்டியவர்களாக இருக்கின்றோம். தென்னிந்தியாவிலிருந்து வெளியாகும் குமுதம் ஆனந்த விகடன், பொம்மை, ஜெமினிசினிமா, போன்ற சஞ்சிகைகளை அறிந்திருக்கிற அளவிற்கு - எம் பிரதேசத்தில் வெளிவரும் சஞ்சிகைகளை எமது தமிழ் வாசகர்கள் அறியாதிருக்கின்றனர். இவற்றிற்கான பதில்களை வாசகர்களில் பலர் அறிந்திருக்கின்றனர். அவற்றை யிட்டு நாம் பின்னர் எடுத்துக்காட்டுவோம்,

## புதினப் பத்திரிகைகள்:-

நாம் இதற்கு முன் குறிப்பிட்டது போல், எமதுதேசியதமிழ் புதினப்பத்திரிகையும்(துரித) வளர்ச்சியை அடையவில்லை என்பதை ஒரு சந்தர்ப்பத்தில் தினகரன் ஆசிரியர் திரு. சிவ குருநாதன் குறிப்பிட்டதை இவ்விடத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். 1983 க்குப் பின் வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை நாளாந்த புதினப்பத்திரிகைகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கப்பட்டதை எம்மில் பலர் அறிவர். உதயன், சஞ்சீவி, முரசொலி, ஈழநாடு போன்ற புதினப்பத்திரிகைகள் வடமாநிலத்தில் இன்று முக்கியத்துவம் பெறுகின்றன.

ஆடிமாதம் 13ந் திகதி இரவு 7மணியளவில் கொழும்பில் திருவாளர்கள், அமிர்தலிங்கம்,யோகேஸ்வரன், சிவசிதம்பரம் சுடப்பட்டதையும், அமிர், யோகேஸ், இறந்ததையும் 14ந் திகதி அதிகாலையிலேயே, தேசிய புதினப் பத்திரிகைகள் வெளியிட முடியாத நிலையிலும், (நகரத்திற்குப் புறம்பாக) வடக்கு மாநிலப் புதினப் பத்திரிகைகள் வெளியிட்டதை இவ் விடத்தில்குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

எனவே ஒவ்வோர் பிரதேசத்திற்குமென புதினப் பத்திரிகைகள் இருக்க வேண்டும் எனும் அவசியத்தை மேல் வந்த வட மாநிலப் புதினப் பத்திரிகைகள் உணர்த்தி நிற்கின்றன. போக்குவரத்துத் தடை ஏற்படுகின்ற போதெல்லாம் புதினப் பத்திரிகைகளை நாம் பெற்றுக் கொள்ள முடிவதில்லை. இக்குறைபாட்டை வட மாநில மக்கள் நிவர்த்தி செய்துள்ளனர் என்பது உண்மை.

(தொடரும்)

### அன்னாசித் தீவு

அன்னாசிப் பழம் உலகெங்கிலும் பழமாகவும், பழச்சாறாகவும் விரும்பி உட்கொள்ளும் ஒரு பழம். இந்தப் பழம் மிகஅதிகமாக விளைவது எங்கு தெரியுமா? ஹவாய்த் தீவில். இது பசிபிக் பெருங் கடலில் உள்ள சிறிய தீவுக் கூட்டம். உலகில் விளையும் மொத்த அன்னாசிப் பழங்களில் மூன்றில் ஒரு பங்கு இங்கு தான் விளைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தூது — செல்லு / சொல்லு — தென்றலே

'மன்னுயில்' P. செல்வம்

தென்றல் காற்றே கொஞ்சம் நில்லு
சொல்லும் சேதியைக் கேட்டுச் செல்லு
இன்புற வாழ்க்கை வாழ்ந்தவெம் மக்கள்
இழிவாகிப் போன துயர்தனைச் சொல்லு
துன்பப் படுகின்ற வாழ்விலே வீழ்ந்து
தூசுபோ லாயினர் என்பதைச் சொல்லு
இன்று போல் இனியும் இப்படி வந்தால்
இல்லையிவ் வுலகம் என்பதைச் சொல்லு

படுகொலை செய்வதை நிறுத்தி விட்டுப்
பட்டினிச் சாவை ஒழித்திடச் சொல்லு
கடும்பசி கண்டு கண்ணை மூடுமுன்
காட்டிடச் சொல்லு அன்புக் கரத்தினை
சுடுகின்ற ஆயுதம் நம்கையி லிருந்தால்
சுடர்விடும் வாழ்வு வந்திடு மாஆ?
எடுத்தகை வாளே நமக்கெம னாகும்
என்பதை நீயும் இயம்பிடா யோஓ!



சீனியின் விலையோ சீரிய சாச்சு
தேநீர் குடித்தநாள் மறந்தே போச்சு
பாணின் விலையும் படிதாண்டி யாச்சு
பலரது வாழ்வும் பறிபோகலாச்சு
ஏனிந்த வாழ்வு என்றே மக்கள்
ஏங்கியே வாடும் நாள்பல வாச்சு
ஏணியில் ஏறும் பொருட்களின் விலையை
இறக்கிடத் தீரம் காட்டெனச் சொல்லு

கர்த்தா லெனினும் கடையடைப் பெனினும்
கவலையே யின்றி உலாவரும் தென்றலே
ஊரினை அடக்கும் சட்டமி ருப்பினும்
உல்லாச மாய்வரும் வீராதி வீரனே!
யாருளர் உன்னைத் தட்டிக் கேட்க
ஆதலினு லுனைத் தூதுக் களைத்தேன்
நேர்வழி சென்றே உரியவ ரிடத்தில்
நான் சொன்ன சேதியை நயம்படச் சொல்லு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நீயே அருள வேண்டும்

— க. லோகநாதன் —

கனிந்த இறைவா வரவேண்டும் - என்
கற்பனைக் கருவாய் நீ வேண்டும்
இனித்த காவியம் எழுதவேண்டும் - உனை
இமயத்தில் ஓவியம் வரையவேண்டும்

இருண்ட வானில் ஒளி வேண்டும் - எங்கும்
இன்பகானம் இசைக்க வேண்டும்
அருள் எனக்குத் தரவேண்டும் - இந்த
அவனியில் அமைதி வரவேண்டும்

நித்தமும் உனைப் பார்க்கவேண்டும் - நெஞ்சில்
நீங்கிடா தென்றும் வாழவேண்டும்
பத்தனுய் மலர் கோர்க்கவேண்டும் - உனைப்
பாடயில் மெய் வியர்க்க வேண்டும்

பொல்லாத் துன்பம் போகவேண்டும் - பொய்
யாணவம், பொருமை அழியவேண்டும்
எல்லா வளமும் கூட வேண்டும் - என்
இறைவா நீயே அருளவேண்டும்

# "மேய்ப்பனில்லா மந்தைகள்"

— செல்வி. அகிலா குணராஜா —

மேய்ப்ப னில்லாத மந்தைகள்போல்
மண்ணில் அலைந்த மனிதமனம்
ஆய்வில் உழன்று தவிக்கையில்
ஆயன் இயேசுவை நாடுமையா!

பொல்லாக் காலம் நெருங்கைலேயி
பொய்மை செயல்கள் சூழுமையா
கல்லான மனமும் கரையுமையா
கர்த்தர் துணையைத் தேடுமையா!

தேவ அருளை ருசிக்கையிலே
தீய திடங்கள் திறம்புமையா
தேவ ஜெபத்தின் இணையாலே
தீரா நோயும் தீருமையா!

பழிக்குப் பழியென்ற ஈனசெயல்
பாவி நெஞ்சை விட்டகன்ருல்
பலியாய் தன்னை எமக்கீந்த
பரமன் உள்ளம் களிக்குமையா!

எங்களை மேய்க்கும் மேய்ப்பராக
எழுவன் இயேசு இருக்கையிலே
மங்கும் மனமும் மலருமையா
மன்னனை மங்களம் பாடுமையா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சிறுகதை

# என் வீட்டைத் திறந்து விட்டேன்

யோகி

ஆபீசுக்கு போகவேண்டும் என்ற எண்ணம் உதயமாக அவசர அவசரமாகப் படுக்கையை விட்டு எழுந்தேன். சமையல் அறை சென்று காப்பி தொடக்கம் எல்லா அம்சங்களையும் தேடி, காலை உணவை தயார் செய்யவேண்டிய நிலை. இரண்டு மாதங்களாக இப்படியும் ஓர் அனுபவம். சமையல் கலையை எப்படியும் பழகி விடுவது என்ற வைராக்கியத்துடன் தடுமாறும் என்னிடம் அயல் வீட்டுக்குழந்தை ''அங்கிள்; எப்ப அன்ரி வருவாங்க? என்று கேட்கிறாள்.

குழந்தையின் கபடமற்ற கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும் போல இதயம் துடிக்கிறது. குடும்பவாழ்வின் கசப்புகளை எப்படி கூறுவதாம்! இல்லாவிட்டால் அவளுடைய அன்ரியை - அதாவது · என் மனைவியை-எப்படிக் குறைகூறி அவளுக்குக் கூறுவது. என்னுடைய சங்கடத்தைப் புரிந்தோ என்னவோ அயல்வீட்டு அவளின் அம்மா 'ரமணி! நீ சாப்பிடவா' என்று அழைக்கிறாள்.

'அங்கிள் இன்னும் கோப்பியே போடவில்லையம்மா' என்று கூவிக்கொண்டு ஓடிய ரமணியைத் தூக்கிய அவளின் தாய் என்னைப் பார்த்த பார்வை' உன் மனைவியின் இடத்தில் நான் இருந்து இருந்தால் அப்படித்தான் செய்து இருப்பேன்' என்று கூறுவது போல இருந்தது.

திருமணம் ஆகி ஆறு மாதங்கள் கூட ஆகவில்லை. இப்படியும் ஒரு நிலை. என் மனைவி வீட்டைவிட்டு என்னைத் தனியே தவிக்கவிட்டுப் போய் இரண்டு மாதங்கள் ஆகின்றன. ஏற்கனவே எனக்குப் பிடிவாதமான கொள்கைகள். அந்த பிடிவாதத்தினால் வந்த விளைவு தான் இது. உன் பிடிவாதக் கொள்கைகளை விட்டு விட்டால் உன் மனைவியை அழைத்து வரலாம் என்று உள் மனம் கூறுகிறது.

குழந்தைப் பருவத்தில் இருந்தே என் வாழ்வு குறிக்கோள்களுடன் அமைய வேண்டும் என்று வாழ்ந்தவன் நான். சத்தியம், நேர்மை, உண்மை என்னுடைய வாழ்வில் திகழ வேண்டும் என்று நியாயமான வழிகளில் முன்னேறியவன் நான். சமயப்பற்று கொடுத்த ஆர்வம் வாழ்வின் வழிகாட்டியாக இயேசுவையும், அதன் குறிக்கோள்களாக அவரின் போதனைகளையும் உள்ளத்தில் இருத்திக் கொண்டது.

படிக்க வேண்டிய காலத்தில் படித்து விளையாடவேண்டிய நேரத்தில் விளையாடி நேர்மையுடன் நடந்த என்னை என் பாடசாலைத் தோழர் 'ராஜு! நீ சுவாமியாகப் போகின்றாயா?' என்று கேலி செய்த நாட்கள் பல.

கலாசாலை நாட்களில் நீதிக்காக என்னுடைய நேர்மையான பங்கெடுப்பைக்கண்ட என் சகதோழர் 'ராஜு! நீ இப்படிப் போனால் கலாசாலை வந்த நோக்கத்தை நிறைவேற்ற மாட்டாய். பட்டம் பெறமுன் நாலு பெண்ணையாவது காதலித்து இருக்க வேண்டும்' என்று சாடிய கேலிக் கூத்துக்கள் அநேகம்.

இன்று தொழிலகத்தில் கண்ணியமானவனாக, பொறுப்புணர்ச்சி மிக்கவனாக, சொற்ப காலத்துள் வங்கியின் பொது முகாமையாளனாகக் கடமையாற்றுகிறேன் என்றால் என்னு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

டைய இயேசுவும் அவரின் போதனையும்தான். இரண்டும் என்றும் என்னைக் கைவிட்டது இல்லை.



என் சமயப்பற்று, சத்தியத்திற்குத் தலை வணங்கும் குணம், பொறுமையுடன் பிறரைப் புரிந்து கொள்ளும் தன்மை என் கீழ் பணிபுரியும் சக தொழிலாளரிடம் என் மேல் ஒரு நம்பிக்கையையும் மதிப்பையும் பெற்றுக்கொடுத்துள்ளது. பல பணியாளர்கள் அவர்களின் வீட்டுக்கவலைகள் தனிப்பட்ட சிக்கல்கள் நாட்டின் பிரச்சனைகள் யாவற்றையும் என்னிடம் பகிர்ந்து அறிவுரை கேட்டு ஆறுதலடைந்து போன நாட்கள் எத்தனையோ என் வாழ்க்கை ஏடுகளில் எழுதப்பட்டுள்ளது.

அவ்வாறான என் வாழ்க்கை ஏட்டின் ஓர் அத்தியாயம் தான் 'மஞ்சுளா'. நான்கு மாதங்களின் முன் என் அலுவலகத்திற்கு மாறுதலாகி வந்தவள். சிறுபராயத்தில் பெற்றோரை இழந்து, அனாதை இல்லத்தில் வளர்க்கப்பட்டு வேதனைகளின் மத்தியில் முன்னேறியவள். கலகலப்பாகப் போகுமிடம் எல்லாம் புன்னகையைக் கொண்டு செல்லும் அவள் ஒரு மாதத்திற்குள் தன் வாழ்க்கையைப் பகிர்ந்து என் வாழ்க்கை நூலில் ஓர் அத்தியாயமாக மாறிவிட்டாள்.

பெண்கள் விடுதியில் தங்கியிருந்து வேலைக்கு வரும் அவளுக்கு வாழ்க்கையில் பற்று என்று கூற இருப்பது எல்லாம் அவள் காதலன். அவளுக்கு வாழ்வளிக்கக் கடமைப்பட்டவன், பெயர் அருணன். அவனுடைய அம்மாவுக்கு அவன் ஒரே பிள்ளை.

அருணனைப் பற்றி மஞ்சுளா ஆயிரம் தடவை என்னிடம் கூறியிருப்பாள். பல புகழ் மாலைகள் அவனுக்கு சூட்டப்பட்ட போதும் மஞ்சுளா கண்டு கொண்ட உண்மை அருணன்' அம்மாவின் பிள்ளை' தாயா? தாரமா? என்ற கேள்வி எழின் அருணன் தாய் கீறிய கோட்டை தாண்ட மாட்டான். ஒரே பிள்ளையாக அம்மாவின் செல்லத்தில் வளர்ந்தவன். மஞ்சுளாவும் இதைப் புரிந்து இருந்தாள். குடும்ப வாழ்வை எண்ணும் போதெல்லாம் இது அவளின் உள்ளத்தை வருடியது.

மஞ்சுளாவோ யாருமற்றவள். கொழு கொம்பின்றித் தவிக்கும் ஓர் அழகான கொடி, பற்றிப் பிடிக்கக் கிடைக்கும் கொழுகொம்பு யாருடனும் பகிரப்படுவதை ஏற்க மாட்டாள். அது அருணனின் அம்மாவையும் உள்ளடக்கும்.

திருமணம் என்ற நிலையில் சிக்கல் ஒன்று இதன் பின்னணியில் வரும் என்பதை நானும் மஞ்சுளாவும் பல தடவைகளில் பேசியிருப்போம். "கணவன் தன் பெற்றோரை விட்டுப் பிரிந்து தன் மனைவியுடன் ஒன்றித்து இருப்பான். அவர்கள் இருவரும் ஒரே உடலாவார்கள்" என்று ஆதியாகமம் கூறுவது திருமணத்திற்கு எவ்வளவு அவசியம். எவ்வாறு இதை அருணனுக்கு புரியவைப்பது என்று நானும் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

அருணனின் தாயின் உள்ளம் திறந்தால் தான் இந்த இளசுகளின் வாழ்க்கை மலரும். அன்பு என்ற அந்தப்புனித உணர்வுக்குத் தடைபோடாத பெரிய மனம் என்று ஒன்று இருந்துவிட்டால் வாழ்க்கையில் வேதனை என்பதே இருக்காது. ஆனால் பரந்த மனமும் உயர்ந்த சிந்தையும் கொண்டவர்களை சமூகத்தில் சந்திப்பது என்பது குதிரைக் கொம்பாக அல்லவா உள்ளது. என் வாழ்வும் இதற்கு விதி விலக்கல்ல என்பதை அன்று கண்டு கொண்டேன்.

பழகுபவர்களின் வாழ்வில் பங்கெடுத்து அவர்களின் இன்பத்தையும் துன்பத்தையும் பகிர்ந்து கொள்ளும் என் வாழ்வில் விதி அன்று விசித்திரமாக விளையாடத் தொடங்கியது. விதியின் விளையாட்டு ஆரம்பமாகி இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. இந்த விளையாட்டில் பல பாயின்ட்டுகளில் நான் தான் தோற்றுக் கொண்டு இருப்பது போல தெரிகிறது.

ஆட்டம் ஆரம்பமாகிய அந்த வாரம் என் மனைவி தன் பெற்றோர் வீட்டிற்கு போய் இருந்த சமயம் அது. மாலை ஏழு மணியிருக்கலாம். என் வீட்டின் அழைப்பு மணி ஒலித்தது. மெல்ல நடந்து சென்று கதவை திறந்த நான் மஞ்சுளாவைக் கண்டேன், அழுது வீங்கிய முகம், அலங்காரங்கள் கலைந்த கோலம், இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கண்ணீர் வடிக்கும் கண்கள் மஞ்சுளா நின்ற கோலம் பரிதாபகரமாகக்காட்சியளித்தது.

"மஞ்சுளா! என்ன நடந்து விட்டது உனக்கு.வந்து உட்கார்" என்று அழைத்து உட்கார வைத்து நானும் கதிரையை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்கின்றேன்.

வாய் திறந்து ஒன்றும் கூறாமல் விம்மிப் பொருமிஅழத் தொடங்கினாள், மஞ்சுளா சுமார் அரைமணி நேரம் அழுது தீர்த்து இருப்பாள். நானும் பொறுமையாக அருகில் அமர்ந்து இருந்தேன்.

உள்ளங்கள் உறவாகும் தூய நேரம் அது. வீண் வார்த்தைகள் அந்த சங்கமத்தை குலைத்து விடும் என்று பல அனுபவங்களில் கண்டு இருந்த எனக்கு அந்த அமைதி ஆயாசமாக தோன்றவில்லை. மாறாக என் சக்தியை ஒன்று சேர்க்கும் ஆலய சந்நிதியின் அமைதியாக விளங்கியது.

அழுது ஆயாசமான மஞ்சுளா நான் கொடுத்த குளிர்ந்த நீரைப் பருகி விட்டு "அருணன் என்னை கைவிட்டு விட்டான், ராஜு" என்றாள். மீண்டும் விம்மல் உடைத்துக் கொண்டு வந்தது. அழுகை குமுறியது.

விம்மல் பொருமல்களுக்கிடையே மெல்ல மெல்ல விடயத்தைக் கிரகித்துக் கொண்டேன்.

அவள் காதலுக்கு எது இடையூறு கொடுக்குமென்று பயந்தோமோ அதே நடந்து விட்டது. அனாதைப் பெண் மஞ்சுளாவை அருணனின் அம்மா ஏற்க மாட்டாளாம். அம்மா பிள்ளை அருணன், தாய் கீறிய கோட்டைத் தாண்ட மாட்டானாம். என் பிணத்தின் மீதுதான் உனக்கும் மஞ்சுளாவுக்கும் திருமணம் என்று அம்மா கூறிவிட்டாள். அருமை மகனுக்கு அம்மாவின் பிணத்தைக் காண விருப்பமில்லை.



காதல் என்ற ஒன்றில் இறங்கிவிட்டால் கூறப்படும் உறுதி மொழிகள் ஆயிரம் ஆயிரம். ஆனால் வாழ்க்கை என்று வந்து விட்டால் அல்லவா தெரியும் அவை கலையும் விதம்.

மஞ்சுளாவிடம் இருந்து இவற்றை நான் தெரிந்து கொண்டபோது சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் எட்டடித்தது.

என் உள்ளத்தில் ஒரு நெருடல்; நேரம் எட்டுமணி. மஞ்சுளா ஹொஸ்டலில் இருக்க வேண்டியவள். நான் தனியே மனைவியும் இன்றி வீட்டில் இருக்கின்றேன். "ஓய்வு நாள் மனிதனுக்கேயன்றி மனிதன் ஓய்வு நாளுக்கல்ல" என்று என் குரு இயேசு சமூகவிதிகளுக்கு மனிதனைப் பலியிட்ட பரிசேய கூட்டத்தை கண்டித்தது என் கண்ணுள் நிழலாடியது. ஆபத்துக்கு உதவாத சமூகவிதிகளில் எனக்கும் நம்பிக்கை இல்லா விட்டாலும் இச்சூழ்நிலை என்னை சங்கடப்படுத்தியது.

"மஞ்சுளா! நீ ஹொஸ்டலுக்குப் போவதில்லையா? நான் உன்னை அழைத்துப் போகட்டுமா, உன்னைத் தேடுவார்களே" என்று கேள்விகளை அடுக்கினேன்.

"ராஜு! என் வாழ்க்கையெல்லாம் உடைந்து விட்டது. இந்தக் கோலத்தில் என்தோழிகளைச் சந்திக்க விருப்பமில்லை. எனக்குப் பைத்தியம் பிடிக்கும் போல இருக்குது" என்று அவள் குமுறினாள்.

ஓடிக் கொண்டிருக்கும் நேரத்தை நிற்பாட்டமுடியும் என்றால் எவ்வளவு நல்லது என்று எண்ணினேன். நான் சாவித்திரி இல்லையே. "நான் தனிமையில் யாருமற்று இருந்தேன். நீ எனக்கு ஆறுதலானாய். நான் புகலிடமற்று இருந்தேன். நீ எனக்கு புகலிடமானாய்' என்று இயேசுகூறுவது தெளிவாக கேட்டது.

மஞ்சுளாவை தெருவில் விடமுடியாத இரவு அது. அவளின் ஹொஸ்டலுக்கு போன்பண்ணி மஞ்சுளா என் வீட்டில் நிற்கிறாள் என்றேன் நான் திருமணம் ஆனவன் தானே. அன்று என் மனைவி இல்லையென்பது அவர்களுக்கு தெரியவா போகிறது.

"மஞ்சுளா! உன் மனம் அமைதியடையும் வரை என் வீடு என்றும் திறந்து இருக்கும்" என்று கூறி அவளுக்குத் தங்குவதற்கு அறையொன்றை ஆயத்தம் செய்து கொடுத்தேன்.

என் வாழ்வின் நீண்ட இரவு அது. எப்படி மஞ்சுளாவையும் அருணனையும் இணைப்பது என்று சிந்தித்தவாறு தூக்கம் வராமல் புரண்டு புரண்டு தூங்கிப் போனேன்.

இரண்டு நாள் மஞ்சுளா என் வீட்டின் விருந்தாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆனுள். மனம் ஆறுதலடைந்து அவள்ஹொஸ்டலுக்குத்திரும்பிய அன்று நானும் அவளையும் அருணனையும் எப்படியும் இணைத்து வைப்பேன் என்று உறுதி பூண்டேன்.

இரண்டு நாள் கழித்து வீடுதிரும்பிய என் மனைவியின் முதல் கேள்வி என்னைத் திணறடித்தது. "நான் இல்லாத நேரம் இந்தவீட்டில் யாருடன் சல்லாபமாடினீர்கள்? இந்தக் கட்டிலில் நான் இனித் தூங்க மாட்டேன்" என்று கூச்சலிட்டவளாக அயலவர் எட்டிப் பார்க்க என் அன்பு மனையாள் என்னைக் கைவிடத் தயாராகி விட்டாள். உலைவாயை மூடினுலும் ஊர் வாயை மூட முடியாது என்ற உண்மையை அன்று உணர்ந்து கொண்டேன். யார் என்ன வெல்லாம் கூறிவைத்தார்களோ!

விளக்கம் கொடுக்க முயன்ற என்னைப்பார்த்து சூட்கேசை 'டப்' என்று மூடுகிருள் என் மனைவி. அத்தியாயம் முடிந்து விட்டது.

யேசு கூறினுர் 'உன்னை வரவேற்பவர்களை நீயும் உன் இல்லத்தில் வரவேற்று,உனக்கு வந்தனம் செய்பவர்களுக்கு நீயும் வந்தனம் செய்தால் சிறப்பாக என்ன செய்துவிட்டாய். பரிசேயரும் புறவினத்தாரும் அவ்வாறு செய்யவில்லையா.?

நான் கிறிஸ்தவனுகத்தான் நடந்து கொண்டேன். திக்கற்று நின்றவளுக்கு கைமாறு எதிர் பார்க்காது புகலிடமளித்து விட்டேன்.

எந்த ஒரு கொடியும் தன் கொழுகொம்பை பகிரமுன் வராதுதான் ஆனுல் அந்த கொடி, கொப்புக்கு சிறையும் பாரமும் ஆகிவிடவும் கூடாதல்லவா? என் மனைவியின் நம்பிக்கையின்மை பாரமாக என்னை அழுத்தியது, அதை நான் சுமக்க, என் மனைவி சூட்கேசுடன் புறப்பட்டாள் அவள் தாய் வீட்டிற்கு.

நான் மீண்டும் தனிமனிதனுகி இரண்டு மாதங்கள் ஓடிவிட்டன. பலர் என்னை வாழத் தெரியாதவன். கொள்கை என்ற பெயரில் வாழ்க்கையை அழித்துக் கொண்டமுட்டாள் என்று கூறியதை காதால் கேட்டு விட்டேன். என்னைப் புரிந்து கொண்டவர்களுக்கும் என் இதயத்துடன் உறவாடுபவர்களுக்கும் நான் ஒரு தியாகி. காலப்பொழுது என் மனைவியின் கண்களைத் திறக்கும். அப்போது அவள் என்னைப் புரிந்து கொள்வாள். அன்றைய என் செயலில் பெருமிதமும் அடைவாள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் என் வாழ்வை நடாத்த முயல்கின்றேன்.

இந்த இரண்டு மாதங்களில் அருணனையும் அவன் தாயையும் பல தடவை சந்தித்து இருப்பேன். திருமணம் குடும்பம், உறவு என்று நான் கேட்டது. வாசித்தது, படித்து அறிந்தது இறுதியில் என் குடும்ப அனுபவம் என்றுகூறி எல்லா விடயங்களையும் பேசி விவாதித்து, பகிர்ந்து கொண்டேன். என் பல நாள் உழைப்பு பயன் கொடாமலா போகப் போகின்றது.

சத்தியம் என்றும்என்னைக் கைவிட்டதில்லையென்ற அனுபவ உணர்வுடன் என் காலை உணவை ஆரம்பிக்கின்றேன்.

கோப்பி வாயில் கசக்கின்றது. எத்தனை தடவை போட்டாலும் இன்னும் சரியான அளவு பிடிபடவில்லை. எனக்கும் சமையலுக்கும் வெகு தூரம்.

அப்போது பார்த்து என் டெலிபோன் ஒலித்தது. எட்டி எடுத்து 'ஹலோ' என்றேன்.

மஞ்சுளா போனில் பேசினுள். அவள் குரல் குதூகலித்தது. அருணனின் அம்மா திருமணத்திற்கு சம்மதித்து விட்டாளாம். இன்னும் இரண்டுவாரங்களில் திருமணமாம். அவளுக்குத்தாயாகவும் தந்தையாகவும் நான் நின்று நடத்தி வைக்க வேண்டுமாம். என் உள்ளம் மகிழ்ச்சியினுல் அடிக்கிறது.

'ராஜு' நீங்கள் அன்று உங்கள் வீட்டின் கதவுகளைத் திறந்து எனக்குப் புகலிடம் கொடுத்திரா விட்டால் நான் இன்று உயிருடன் இருந்திருக்க மாட்டேன். என்னை வாழவைத்த நீங்கள் தான் என் திருமணத்தை நடத்தி வைக்கவேண்டும். உங்கள் வீடு இறைவன் உறையும் சந்நிதி. ராஜு' - இது மஞ்சுளாவின் கடைசி வார்த்தைகள்.

என் வாயில் கசந்த கோப்பி இனிப்பது போன்ற ஓர் உணர்வு.

மஞ்சுளாவின் இந்தஇறுதி வார்த்தையை என் வீட்டிற்கு விளக்கேற்ற வந்த லக்சுமி கேட்டிருந்தால்...

சத்தியத்தைக் குழிதோண்டிப் புதைக்க முடியாதே.... காலமும் நேரமும் பதில் கூறும். அதுவரையும் என்றும் என் வீட்டின் கதவுகள் திறந்து தான் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விமர்சனத்தில் நடுநிலை

க. யோகநாதன் B. A. (Hons)

இலக்கியத்தின் ஆக்கநிலையிலாயினும் சரி அதன் விமர்சன நிலையிலாயினும் சரி, ஏகோபித்த கருத்தொன்றைப் பெறுவது இயலாத ஒரு காரியம். கலாச்சாரப் பாரம்பரியம், சமுதாய நிலவரம் ஆகிய பொது நியமங்களோடு, வர்க்க உணர்வு, சமூகத்தோடு தனிமனிதனுக்கு இருக்கும் தொடர்பு, சமூகப் பங்காற்றல் ஆகிய தனியாள் வேறுபாடுகளும் இலக்கிய, விமர்சனக் கொள்கைகளில் ஆளுக்கு ஆள் வேறுபாடுகளை ஏற்படுத்துகின்றன. இவ்வேறுபாடுகள் தவிர்க்க முடியாதவையும் கூட. சிலர் கருதுவது போல் இவ்வேறுபாடுகளைக் களைந்து விடவும் முடியாது. முரண்பாடுகள் இன்றி வளர்ச்சி இல்லை என்பது ஒரு சமுதாய விதி. இதற்கு ஏற்ப இலக்கிய உலகில் காணப்படும் கொள்கை வேறுபாடுகளே இலக்கிய ஆக்கத்துறை வளர்ச்சிக்கும், விமர்சனத்துறை வளர்ச்சிக்கும் உதவுகின்றன. இந்த யதார்த்த நிலையை அறியாத வகையில் அல்லது இதனை மூடி மறைக்கும் வகையில் ''உண்மை இலக்கியம், நடுநிலை விமர்சனம்'' என்ற கூப்பாடுகள் தமிழ் இலக்கிய உலகில் கேட்பது உண்டு.

இலக்கியத்தில் எல்லார்க்கும் பொதுவான உண்மை என்ற ஒன்று சாத்தியம் இல்லை. யதார்த்தத்தில் இருக்கின்ற இலக்கியங்கள் எல்லாம் சார்பு இலக்கியங்களே ஆகும். பரந்துபட்ட மக்களின் நலன்களுக்குரிய சார்பு, பரந்து பட்ட மக்களின் நலன்களுக்கு விரோதமான சார்பு என இலக்கியங்களின் சார்புத் தன்மையை எளிமையான ரூபத்தில் கூற முடிந்தாலும் இதனை விட இன்னும் நுணுக்கமாக இச் சார்புத் தன்மை பற்றி விளக்க முடியும்.

அரசியலை. சமூக முரண்பாடுகளை கையாளும் சந்தர்ப்பங்களில் சார்புத் தன்மை இலக்கியங்களுக்கு இருக்க வாய்ப்புண்டு (அரசியல் சமூக முரண்பாடுகளைக் கூட சார்பற்ற இலக்கியமாக்க முடியும் எனக் கூறுவோரும் உண்டு) ஆயின் தனி மனித உணர்வுகளையும், அவர்களின் மனச் சிக்கல்களையும் சோகதாபங்களையும் விவரிக்கும் இலக்கிய ஆக்கங்களில் பொதுவான ஓர் உண்மையைக் காண முடியுமே தவிர அவற்றில் அரசியல் வர்க்கக் கோட்பாட்டுச் சார்புகளைக் காண்பது இயலாது என வாதிடக் கூடியவர்களும் தமிழ் இலக்கிய உலகில் காணப்படவே செய்கின்றனர். தனி மனித உணர்வுகளைச் சித்தரிக்கின்றோம் எனக் கூறப்படும் இலக்கியங்களைச் சரியாகப் பகுப்பாய்வு செய்தால் அவற்றைக் கூட முற்போக்கான, பிற்போக்கான படைப்புக்கள் எனப் பாகுபாடு செய்ய முடியும். ஆயின் இக் கட்டுரை ''சார்பற்ற நடுநிலை விமர்சனம்'' என்ற விடயத்தையே ஆராய முற்படுகின்றது.

''நடுநிலையான விமர்சனம்,' என்று கூறும் பொழுது அதற்குக் கொடுக்கப்படும் அர்த்தத்தைப் பொறுத்தே பிரச்சனைகள் எழுகின்றன. ''எத்தகைய கோட்பாட்டுச் சார்புகளுக்கும் அப்பால் இலக்கியங்களை அணுகி இவற்றின் பொது உண்மைகளைக் கூறுவதே நடுநிலையான விமர்சனம்'' என நடுநிலை விமர்சனம் என்ற தொடருக்கு விளக்கம் அளிக்க முயல்பவர் இருக்கின்றனர், இக் கருத்து ஏற்றுக் கொள்ள முடியாதது ஆகும்.

விமர்சகனும் மனிதன். ஆசாபாசங்களை உடையவன். சமூகத்தில் வாழ்பவன். சமூகத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டவன், உலகத்தின் எல்லா விடயங்களிலும் அவனுக்கு விருப்பு வெறுப்பு இருக்கும், ஏற்கனவே கூறியது போல் கலாசார மரபு, சமுதாய நிலவரம் என்ற பொது நிலைகளும், வர்க்க உணர்வு, சமூகத்தோடு விமர்சகனுக்குரிய உறவு , சமூகத்தில் அவனின் பங்காற்றல்கள் என்ற அவனின் தனியாள் நிலைகளும் அவனுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கென்றதொரு கருத்துச் சார்பைக் கொடுத்தே தீரும். அதிலும் விமர்சகன் என்ற வகையில், அறிவியல் விழிப்பு நிலையில் விமர்சகன் பிரச்சினைகளை அணுக வேண்டி இருப்பதால் அவனுடைய சார்பு நிலை திட்டவட்டமான ஒரு கோட்பாட்டுச் சார்பு நிலையாகவே அமையும். (அபிப்பிராயக் குறிப்புக் கூறுபவர்களை நான் விமர்சகர் என்ற வரையறைக்குள் இங்கு கொண்டு வரவில்லை) இத்தகைய சார்பு நிலை கொண்ட ஒருவர் தனது சார்புத் தன்மைகளைச் சட்டை களைவது போல் களைந்து வைத்து விட்டு இலக்கியங்களை நடுநிலையோடு விமர்சிக்க வேண்டும் எனக் கேட்பது அறியாமை. விமர்சகன் ஒருவன் தனது விமர்சனம் கோட்பாடுகளுக்கு (சார்புத் தன்மைக்கு) அப்பாற்பட்ட நடுநிலையான ஒரு விமர்சனம் எனக் கூறுவான் ஆயின் அது ஏமாற்று. உலகில் எவராக இருந்தாலும் அவர்கள் அறிந்தோ அல்லது அறியா நிலையிலோ சார்புத் தன்மை கொண்டு இருப்பர். ஒவ்வொரு கருத்துக்களும் வர்க்கப் பின்னணி கொண்டவை. வர்க்கச் சிந்தனைகளைக் கடந்த சிந்தனைகள் கிடையாது. இதையே "ஒவ்வோர் கருத்தின் பின்னாலும் அதற்குரிய வர்க்க நலன் இருக்கும்" எனக் கூறுவர்.

ஓடும் செம் பொன்னும் ஒக்க நோக்கும் பக்குவம் பெற்ற முற்றும் துறந்த முனிவர்களுக்குக் கூட துறக்கலில் சார்பு இருப்பதை யார்தான் மறுப்பர்? இத்தகைய துறவுச் சார்புகளுக்குக் கூட வர்க்கரீதியான விளக்கங்கள் கொடுக்க முடியும். சிலருக்கு இந்த நிதர்சனத்தை ஏற்பதில் கஷ்டம் இருக்கலாம். எல்லாக் கருத்துக்களும் சார்புத் தன்மை கொண்டவைதான் என்பதை ஜீரணிக்க முடியாது இருக்கலாம். ஆயின் அது கூட அவர்களின் சார்புத் தன்மையையே காட்டுகின்றது. அதாவது ஏனைய கருத்துக்களை நிராகரித்து தம் கருத்தே பொது உண்மை, ஒரேயொரு உண்மை என அவர்கள் தம் கருத்துக்களின் சார்புத் தன்மையை மறைத்து, ஏனைய சார்புக் கருத்துக்களுக்கு எதிராக தமது கருத்தைப் பொது உண்மை என்ற "லேபலோடு" சமூகத்துக்குள் மறைமுகமாகத் திணிக்க முயல்கின்றனர். தமிழர் சிந்தனை மரபில் இது ஒன்றும் புதிய விடயமல்ல. காலத்திற்கு காலம் தமிழர் மத்தியில் தோன்றிய அறிவியல் பிரிவினர் தாம் தாம் கூறுவதையே சமூகத்தில் பொது உண்மையெனக் காட்டுவதற்கு முயற்சித்தே வந்துள்ளனர். தமிழர் வரலாற்றை மீள நோக்கின் இதை விளங்கிக் கொள்வதில் நமக்குச் சிரமம் இருக்காது.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்" - என கொல்லாமையே மனிதன் உய்யும் வழிக்குரிய உண்மையென வள்ளுவர் கூறினர். ஆயின் வள்ளுவருக்குப் பின் வந்த அப்பர் சுவாமிகளோ மனிதன் உய்யும் வள்ளுவர் கூறிய உண்மையைத் தலைகீழாகப் புரட்டி விடுகின்றார்.

"ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந் தார்க்
கன்பராகில் அவர் கண்டீர்
நாம் வணங்கும் கடவுளாரே" - என்று கூறி இதையே தன் கால உண்மையாக்க முயற்சிக்கின்றார் அப்பர். ஆகவே பொதுவான நிலையான உண்மை என்ற ஒன்று இல்லை. அதாவது எல்லோருக்கும், எக்காலத்திற்குமுள்ள உண்மை" என்ற ஒன்று இல்லை. ஊருக்கு ஊர் காலத்திற்கு காலம் ஆளுக்கு ஆள் உண்மைகள் மாறுபடுகின்றன. மொத்தத்தில் உண்மைகள் பலவிதம். இதை உணர்ந்ததின் பேரிலேயே

"ஞாலம் முழுமைக்கு மொன்றாய்
எந்த நாளும் நிலைத்திடும்
நூலொன்று மில்லை" - எனப் பாரதியும் பாடினான் பொதுவாகக் கூறுவதாயின் உண்மைகள் ஒன்றிற்கு மேற்பட்டுக் காணப்படுகின்றன. மனிதர்கள் தத்தம் சார்புத் தன்மைகளின் அடிப்படையில் தமக்குப் பிடித்த உண்மைகளின் பின்னால் அணி திரள்கின்றனர். தாம் அணி திரண்ட உண்மையை ஏனைய உண்மைகளுக்கு எதிராய் நிலைநிறுத்தப் பிராயத்தனம் புரிகின்றனர். காலம் இவற்றின் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கின்றது. பரந்துபட்ட மக்களின் நலனைக் கருத்தில் கொண்ட உண்மைகள் கால ஓட்டத்தில் வெற்றியை நிலைநாட்டுகின்றன. இந்த உண்மையின் வெற்றியையே பட்டுக் கோட்டைக் கல்யாண சுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"உண்மை ஒரு நாள் வெளியாகும் -அதற்கு
உருட்டும் பிரட்டும் பலியாகும்" - எனப் பாடினார்.

இதுவரை கூறியவற்றால் எல்லோர்க்கும் பொதுவான உண்மை அதனை இனம் கண்டு விமர்சிப்பதே ஒரு நடுநிலை விமர்சகனின் பணி என்ற கூற்று அர்த்தம் அற்றுப் போகின்றது. எல்லா விமர்சகர்களும் தத்தமக்கென உள்ள சார்பு அளவு கோல்களைக் கொண்டே தாம் விமர்சனத்திற்கு உள்ளாக்கும் இலக்கியங்களைத் திறனாய்வு செய்கின்றனர்.

அவ்வாறாயின் நடு நிலையான விமர்சனம் என்பதே கிடையாதா என யாரும் மூக்கில் விரல் வைத்துக் கேள்வி கேட்கலாம்.

ஏற்கனவே நோக்கியவாறு எக்காலத்தும் எல்லோர்க்கும் பொதுவான உண்மைகளைச் சுட்டும் நடு நிலையான விமர்சனம் என்பது கிடையாது. ஆயின் வேறு ஒரு அர்த்தத்தில் நடுநிலையான விமர்சனத்திற்கு சாத்தியம் இருக்கவே செய்கின்றது. அது பற்றி நோக்குவது பயனுள்ளதாகும்,

தனக்கென ஓர் அளவு கோலைக் கொண்டு இருக்கும் ஒரு விமர்சகன் இலக்கியங்களைத் திறனாய்வு செய்யும் பொழுது தன்னவர் பிறர், தெரிந்தவர் தெரியாதவர், வேண்டியவர் வேண்டாதவர் போன்ற வேறுபாடுகளை நோக்காது தனது அளவுகோலை நேர்மையுடன் பிரயோகித்து தான் திறனாயப் புகுந்த படைப்புக்களைப் பற்றிய தன் திறனாய்வுக் கருத்துக்களை முன்வைக்க வேண்டும். இவ்வாறு ஒரு விமர்சகன் நடந்து கொள்ளும் பொழுதே அவன் நடு நிலையுடன் நடந்து கொள்கின்றான் எனலாம். இந்த நடுநிலையை இலக்கிய விமர்சகன் கட்டாயம் கடைப்பிடித்தே தீரல் வேண்டும். தமிழ் இலக்கிய உலகை நோக்கும் பொழுது இத்தகைய நடுநிலையான திறனாய்வுவறிதாகவே காணப்படுகிறது. இதற்குக் காரணமாக அமைவது தமிழ் இலக்கிய உலகில் காணப்படும் குழுவாதமும், சந்தர்ப்பவாதமுமே ஆகும். இக் குழுவாதமும் சந்தர்ப்பவாதமும் இருவகையாக வெளிப்படையாகின்றது.

தமது குழுவைச் சார்ந்தவர் எழுதியவை தமது அளவு கோல்களுக்குள் அமைவுறாது விடினும் வலிந்து அவற்றைப் போற்றுதல்.

தமது குழுவைச் சாராதவர் ஒருவரின் படைப்பு தமது அளவுகோல்களுக்கு அமைவுறக் காணப்பட்டாலும் அவற்றை இகழ்தல் அல்லது கண்டு கொள்ளாது விடுதல்.

இவ்விரு வகைப் போக்கையும் நாம் தமிழ் இலக்கிய உலகில் மரபுவாதிகள், நவீனத்துவவாதிகள், மார்க்சியவாதிகள் என்ற சகல தரப்பாரிடமும் அவதானிக்கலாம்.

இது நடுநிலை தவறிய ஒரு விமர்சன வழிமுறையாகும். ஒரு திறனாய்வாளன் தனி மனிதர்களைக் காட்டிலும் தான் வரித்துக்கொண்ட கோட்பாட்டிற்கு விசுவாசமாக இருக்க வேண்டும். ஆட்களுக்கு ஏற்றவாறு தனது அளவு கோல்களை நெகிழ்த்தக் கூடாது. அவ்வாறு இல்லாது போனால் அவன் பேசும் கோட்பாடு அவனளவிலேயே அர்த்தம் அற்ற ஒன்றாகி விடும்.

இலங்கைத் தமிழ் இலக்கிய உலகை எடுத்துக் கொள்வோம். இங்கும் தம்மை நவீனத்துவவாதிகள் எனக்கருதிக் கொள்ளும் ஒரு குழுவினர் உள்ளனர். இவர்கள் மார்க்சீய எழுத்தாளர்களை இலக்கிய வாதிகளாக ஏற்றுக் கொள்வதில்லை. மார்க்சீய வாதிகள் இலக்கியத்தில் பிரசார நோக்கிற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதால் அவர்களின் எழுத்துக்கள் இலக்கியத் தரமாக இருப்பதில்லை என இவர்கள் குற்றம் சாட்டுவார்கள். அதாவது இலக்கியம் பிரசாரம் செய்யக் கூடாது என்பது இவர்கள் கோட்பாடு. இக் கோட்பாட்டு அடிப்படையில் மார்க்சீயவாதிகளின் இலக்கியங்கள் பலதை இவர்கள் நிராகரித்தும் பேசுவர். இது மட்டும் இன்றி இலக்கியங்களை விமர்சிக்கப் புகுந்து இலக்கியவாதிகள் மீதும் தனிமனிதத் தாக்குதல்கள் தொடுப்பதும் உண்டு. இலக்கியத்தில் என்ன சொல்லியிருக்கின்றது என்பதைத் திறனாய்வு ரீதியாகக் கூறுவதை விட்டு இலக்கியவாதியின் நோக்கத்தைத் தமது அகநிலைக்கு ஏற்ப தனி மனித ரீதியாக அலசி ஆராய்வு செய்வர். இவ்வாறு மார்க்சீய இலக்கியங்களையும் அதை ஆக்கிய இலக்கிய வாதிகளையும் ஆராய்வு செய்யும் நவீனத்துவவாதிகள் மார்க்சீய எழுத்தாளர்களுக்கு எதிராக வீசி எறியும் குற்றச்சாட்டுக்களில் பலது (தனி மனிதக் குற்றச் சாட்டுக்கள் உட்பட) தாம் அணி கோத்து பிடித்து இருப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

டவர்களுக்கும் வெவ்வேறு அளவுகளில் பொருந்தி வருவதை இவர்கள் வசதியாகக் கண்டு கொள்வதில்லை. இது இவர்களின் நடுநிலை தவறல் ஆகும். இவ்விதத் தவறு இவர்களிடம் மட்டும் இல்லை, இலங்கையின் மார்க்சிய, மரபுவாத இலக்கியக் குழுவினரிடமும் கூட காணப்படவே செய்கின்றது.

இலங்கையின் நவீனத்துவ இலக்கியக்குழுவினர் முன்வைக்கும் இலக்கியம் பிரசாரம் செய்யக் கூடாது என்ற மார்க்சிய இலக்கியக்காரர்களுக்கு எதிரான தங்களது கருத்தை அவர்கள் எந்த அளவு தம்மளவில் நேர்மையுடன் கடைப்பிடித்து வருகின்றனர். (இக் கருத்து சரியா? பிழையா? என்பது வேறு) என்பதை ஆராய்பவர்கள் ஏமாற்றமே அடைவர்.

அரசியலைக் கையாள்வது மட்டும் தானா இலக்கியம்? தான் வாழும் சூழலின் அரசியலைத் தொட்டுக்கூடப் பார்க்காமல் ஓர் இலக்கியவாதி சிறந்த இலக்கியங்களைப் படைக்க முடியாதா? புதுமைப்பித்தன் சுதந்திரப் போராட்ட சூழலுக்குள் வாழ்ந்தவராய் இருந்தும் அச்சுதந்திரப் போராட்டம் பற்றிய செய்திகள் அவர் படைப்புக்களை ஆக்கிரமித்து விடவில்லை. அதற்காகப் புதுமைப்பித்தனின் சிறுகதைப்பணியை குறைத்து மதித்து விட முடியுமா? எழுத்தாளன் தனது மனதைப் பாதிக்க அல்லது அவனின் சுய அநுபவத்தைத் தான் இலக்கியமாக்க வேண்டும். அப்பொழுது தான் அது இலக்கியமாக இருக்கும். வெறும் பிரச்சாரங்களை எல்லாம் இலக்கியமாக ஒப்புக் கொள்ள முடியாது. சாதி, வர்க்கம், வறுமை இவை மட்டும் தானா இலக்கியம் என எழுத்திலும் பேச்சிலும் ஆக்ரோசிப்பர், தமிழ் இலக்கிய உலகின் நவீனத்துவ வாதிகள். இந்த வம்ச வழியினரான இலங்கையின் நவீனத்துவ வாதிகள் தமது எதிர் தரப்பாரிடம் முரண்பட்டு வாதிப்பு நடுநிலைக்குச் சென்ற சந்தர்ப்பங்களிலும், பிற சந்தர்ப்பங்களிலும் தமது கருத்தைத் தாமே விழுங்கிக் குளறுபடியாக நிற்கும் நிலையையும் இன்றைய இலங்கைத்தமிழ் இலக்கிய உலகை ஆழ நோக்குபவர்கள் இலகுவாய் அறிந்து கொள்ள முடியும். அதை இங்கு விரித்துக் கூறுவதாயின் அதுவே தனியானதோர் கட்டுரை ஆகிவிடும். இங்கு நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால் இவ்வகைப்பட்ட இலக்கியவாதிகள் நாம் நம்பும் கோட்பாட்டையே தமது குழுவாதத்தாலும் கை நெகிழவிடுவதே ஆகும். ஒரு எடுத்துக் காட்டை மட்டும் இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

''நவீனத்துவ'' அணியினர் இலக்கியத்தில் பிரச்சாரம் ஆகாது என்பர் ஆயின் அவர்கள் தம் கொள்கையை அடித்துப்பேசும் சஞ்சிகையில் வெளி வந்த ஒரு கவிதை வருமாறு.

## அறிந்தும் அறியாதது!

''கன்னடர்கள் தமிழர்களை
வெளியேறச் சொல்கிறாராம்
சிங்களவரும் சொன்னால்
என்ன செய்வதாம்
தர்மிஷ்டர் கேட்கிறார்.

தமிழர்களை மட்டுமா
மலையாளிகளையும் தான்
போகச் சொல்லுகிறார்
கன்னடர்கள்!
கன்னடத்துக்குத்
தமிழர்கள் போனவர்கள்
மலையாளிகளும்
அப்படித்தான்.

ஆனால்
எங்கிருந்து நாம் வந்தோம்
விஜயனுக்கு முன்னிருந்தே
இங்கே இருக்கிறோம்
தர்மிஷ்டர்
வரலாறு படிக்க வேணும்''

இலக்கியம் பிரச்சாரம் செய்யக் கூடாது என்பவர்கள் தான் இக்கவிதையை வெளியிட்டவர்கள். இதன் கவிதைத் தன்மை பற்றி, எதையும் நான் கூற விரும்பவில்லை. இக் கவிதைக்கு ஓர் அடிக்குறிப்பும் போடப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் 1981 - 03 - 25 திகதி அன்று 'ஆனமடுவ' எனும் இடத்தில் பேசிய பேச்சிற்கு பதிலே மேற்படிக் கவிதை என்ற செய்தியை அவ் அடிக்குறிப்பு உணர்த்துகின்றது.

இக் கட்டுரையை வாசிக்கும் வாசகர்களிடமே கேட்கின்றேன். மேற்படிக்கவிதை பிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சாரம் செய்ய வில்லையா? ஓர் அரசியல் வாதியின் கருத்திற்கு எதிரான பிறிதொரு அரசியல் வாதியின் தர்க்கம்போல் மேற்படி கவிதை இல்லையா? தமிழர் விடுதலைக் கூட்டணியின் மேடைப் பிரசங்கக் குறிப்புப் போல் மேற்படிக் கவிதை தென்படவில்லையா?

பிரசாரம் இலக்கியத்தில் ஆகாது எனப் பிரசாரம் செய்பவர்கள் தமது பிரசாரத்திற்கு எந்த அளவு பிசிறு இல்லாமல் நடந்து கொள்கின்றனர் என்பதை 'அறிந்தும் அறியாதது' என்ற மேற்படிப் பிரசாரக்கவிதை பிரசாரம் செய்தன்றே நிற்கின்றது.

இது தான் நமது தமிழ் இலக்கியத்தின் நடுநிலை, தாம் விரும்பாத கருத்துக்களை இலக்கியம் பிரசாரம் செய்வதை விரும்பாதவர்கள் 'பிரசார்ரம் இலக்கியத்திற்கு ஆகாது' என்றனர். அதே பொழுதில் தமக்குப் பிடித்த கருத்துக்கள் பிரசாரம் செய்யப்படும் பொழுது தமது "பிரசாரம் இலக்கியத்தில் கூடாது" என்ற அளவு கோலை வேட்டி மடிப்பிற்குள் மறைத்துக் கொண்டு விடுகின்றனர்.

இத்தகைய தவறுகளை நாம் தவிர்க்க முடியும்; தவிர்க்க வேண்டும். நாம் நம்பும் கோட்பாட்டை நேர்மையாக பிரயோகித்துப் படைப்புக்களை விமர்சிக்க வேண்டும். நூலைப்படைத்தவன் நம்மவனாக இருக்கலாம் நமக்குப் புறம்பானவனாகவும் இருக்கலாம். கெட்டவனாகவும் இருக்கலாம். நல்லவனாகவும் இருக்கலாம். போலியாகவும் இருக்கலாம் அசலாகவும் இருக்கலாம். இவைபற்றி விமர்சகன் கவலைப் பட வேண்டியதில்லை. தனது திறனாய்வு அளவு கோலைப் பிரயோகித்து இலக்கியப்படைப்பை திறனாய்வு செய்யும் பொழுது அது எதைச் சொல்கிறதோ அதையே பிறருக்கும் சொல்லக் கூடியவனாக விமர்சகன் இருத்தல் வேண்டும். இந்தவகையில் விமர்சகன் நடுநிலையான வனாக இருந்தே தீரல் வேண்டும்.

> உங்களின் கவலை நீங்க வேண்டுமானால் அடுத்த ஒவ்வொரு காரியத்திலும் உங்களின் கவனம் அதிகரிக்க வேண்டும்.
>
> —பெர்னாட்ஷா

# வாயாடி வண்டுமணி




அன்னைக்கு பாருங்க வீதியால வந்து கொண்டு இருந்தேனா ரெண்டுபேரு ரொம்ப சுவாரஷியமா பேசிக் கொண்டே போனாங்க. நமக்குத்தான் பொல்லாத காதாச்சே! கொஞ்சம் நீட்டினேன். ஒரு ஆளு சொன்னாரு... - புறா ரொம்ப பயந்த பறவைங்க... நம்ம நிழலைக் கண்டாலே பறந்து போயிடுதே! பிடிக்கவே முடியாது போல இருக்கு... அப்படீன்னாரு. நான் தான் வாயாடியாச்சே விடுவேனா. நான் சொன்னேன்.

புறா சமாதானத்தினுடைய சின்னமாச்சே அதைப் பிடிக்கிறது ரொம்ப கஷ்டமுங்க. பாவம்! எங்கயாச்சும் பயந்து முடங்கிகிட்டு இருக்கும். வாறமாதிரி வரும், அப்புறம் 'பொசுக்' கின்னு போயிடும். உங்கள போலதான் ரொம்பப்பேரு அலையுறாங்க. அது எல்லாருக்கும் 'கண்ணாமூச்சு' காட்டுதுங்க...

ஏங்க! நான் சொன்னது சரி தானுங்களே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# சந்தனச் சிதறல்கள்

**கோகிலா மகேந்திரன்**

**15**

தன்னைத் தானே பார்த்துக் கொண்டாள் மேரி. உடல் சிதறிப் போகாமல் அப்படியே கட்டிலில் கிடக்கிறது. மனந்தான் சிதறிப்போயிற்று. கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன.

இவ்வளவு நேரமும் உள்ளுக்குள்ளே கேட்டுக் கொண்டிருந்த ஒலி - பயங்கரமான ஓர் ஒலி - இப்போது நாடி நரம்புகளெல்லாம் பரவி விட்டாற் போல உணர்ந்தாள். நாடிகளிலும் வெடிப்பது போல, - நாளங்களிலும் வெடிப்பது போல, - நரம்புகளிலும் வெடிப்பது போல!

தனக்கு உண்மையில் மன நோய்தான் ஏற்பட்டு விட்டதோ என்ற சந்தேகம் அவளுக்குத் தோன்றியது.

நாட்கள் வாரங்களாகி மாதங்களாகிக் கொண்டிருந்தன. ஒவ்வொரு இரவும் இருளும் போது ஒரு பயம்! இருண்டு விட்டால் இரவு அவளைக் கொலை செய்து விடும் என்பது போல! ஒவ்வொரு இரவும் விடியும் போது ஒரு அச்சம், விடிந்து விட்டால், வெளிச்சம் அவளை விசாரிக்கும் என்பது போல!

இறந்து போன கிருப்ஸின் மேல் ஓர் அநுதாபம். அவனைத் தான் இவ்வளவு தூரம் புண்படுத்தாமல் விட்டிருக்கலாம் என்பது போல!

அவள் மாத்திரமல்ல யாழ்ப்பாணத்தில் வாழுகிற ஒவ்வொரு மனிதனும் கடந்த சில வருடங்களாக இப்படித்தான் வாழுகிறான்.

மாதங்கள் வருடங்களாகி விட்டன. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத் தொன்பதின் நடுப்பகுதி! மீண்டும்,

மின்சாரம் வாரக் கணக்காய் நின்று போய்விட்டது, தொடர்புச் சாதனங்கள் எதுவும் தொழிற்படவில்லை. ஏழை வீட்டில் மாத்திரமல்ல - சவூதியில் இருந்து லட்சக் கணக்காய் வந்து கொண்டிருந்த வீடுகளிலும் கூடத்தான் தொலைக் காட்சி தொழிற்படவில்லை, வானொலி பாடவில்லை, இன்னல் வரும் போது - ஏழை பணக்காரன் வேறுபாடுகள் இப்படித்தான் அற்றுப் போகும் என்று யேசு போதிக்கிறாரா?

கடைகளில் மின் கலங்களுக்குத் தட்டுப்பாடு. பழுதடைந்து ஒழுகும் நிலையில் இருக்கும் மின் கலங்கள் சில வானொலியில் செய்தியை மட்டும் பலவீனமான குரலில் ஒலி பரப்பின. கலைஞன், பிக்கு, அரசியல்வாதி, சாதாரண குடிமகன், ஆயுதப்படை வீரன் என்ற எந்தவித பேதமுமின்றி நாடு முழுதும் மனிதர்கள் இலையான்களைப் போல இறந்து கொண்டிருந்தார்கள்.

வீட்டை விட்டு வெளியேறி ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் தங்கியிருக்கும் நிலை மறுபடியும் சிலருக்கு வந்துவிட்டது. மேரிக்கும் வரக் கூடும்!

மனிதனின் முதலாவது அடிப்படைத் தேவையாகிய உணவுத் தேவை பூர்த்தி செய்யப்படாத நிலையில், ஏனைய விடயங்களைப் பற்றி மக்கள் அதிக அக்கறை கொள்ள முடியாது.

உணவுத் தேவை பூர்த்தி செய்யப்பட்ட மனிதன் தான்

நான் வைத்த மரங்கள், நான் வளர்த்த மரங்கள் என்று பார்த்துப் பார்த்து மயங்குவதில் பயனில்லை. அவற்றை விடப் பயனுள்ள தானியங்களுக்காக. அவற்றை அழிப்பது முறையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொடர்கதை

உடை பற்றிச் சிந்திப்பான். உணவும் உடையும் திருப்தியாக இருந்தால் உறைவிடம் பற்றி நினைப்பான். அதுவும் இருந்தால்... கல்வி, வேலை வாய்ப்பு, சுதந்திரம், மனித உரிமை என்று இன்னும் மேலே மேலே சிந்திப்பான்.

உணவே கிடையாத போது ..?

கூட்டுறவுக் கடைகளின் முன்னால் கோதுமை மாவும் மண்ணெண்ணெயும் பெறுவதற்குநீண்ட வரிசைகள் தவமிருந்தன. மேரியின் அப்பாவும் காலையில் அந்த வரிசைக்குத்தான் போய்விட்டார். பருப்புடன் இன்னொரு கறி வைப்பதற்காகப் பக்கத்துக் காணியில் தூதுவளை கொய்து கொண்டிருந்தாள் மேரி.

துப்பாக்கி இரு முறை சத்தம் செய்து தான் இருப்பதை நினைவு படுத்தியது. இரண்டு சத்தம் - இரண்டு தனிச் சத்தம்.அவ்வளவுதான். பிறகு அமைதி!

தூதுவளை கொய்த பாதியில் திரும்பி வீட்டை நோக்கி ஓடி வந்தாள் மேரி.

யரோ சுடப்பட்டிருக்கிறார்கள்!

காதுக்குள் சுட்டு... சந்தியில் போட்டிருக்கலாம். சடலத்தைப் பார்த்தால்... அதுவும் பலர் பலமுறை போய்ப் பார்த்தால் ஒரு வேளை இறந்தது யார் என்று வெற்றிகரமாகக் கண்டு பிடித்து விடலாம். அதற்கு மேல், யார் சுட்டது, ஏன் சுட்டது, எப்போது சுட்டது எதையும் கண்டு பிடிக்க முடியாது. அத்தகைய கேள்விகளை இப்போதெல்லாம் யாரும் கேட்பதில்லை. அவையெல்லாம் அர்த்தமற்ற கேள்விகள் என்பது போல!

கிறிஸ்ரோபர் வீட்டிற்கு வந்திருந்தான். இரண்டு வருடத்துக்கு முன் அவளது பிறந்த நாள் விழாவிற்கு வந்த பின் இன்றுதான் வருகிறான்.

உள்ளும் புறமும் பலமாகத் தாக்கப்பட்டிருந்த நிலையில் கிறிஸ்ரோபரைக் கண்டது மேரிக்கு நிறைவாக இருந்தது.

'எப்பிடி வந்தியள்?'

'படிக்கிற மூட் இல்லை. ஒழுங்கைகளுக்குள்ளாலை வந்தன்...'

'உங்களுக்கு ஒரு நாளும் மூட் அவுற் ஆகிறதில்லையெண்டு சொல்லுவீங்கள்...'

'ஆனால்... இப்ப எங்கட இனமே ஓடிச்சுப் போட்ட குளழ மாதிரி வந்திட்டுது... வேரில்லை.காயத்தான்வேணும்'

'றூமிலை தானே இருக்கிறியள்?'

'அந்தப் பக்கம் ஒருத்தரும் இருக்கேலாது... உங்களுக்குத் தெரியுமே ராமுக்கு நடந்தது?'

'இல்லை. ஏன்?... சம்பஸ் குளோஸ் பண்ணின அண்டு சண்டனான்...'

'இது நேற்று... றூமிலை இருந்து வெளிலை போனவன் திரும்பி வரேல்லை... ஆளைக் காணேல்லை...'

'மை கோட்... பாவம்... கடவுள் நல்ல மனிதர்களையும் தண்டிக்கிறார்...'

'கடவுளின்ரை செயல்களுக்கு ஏதோ ஒரு காரணம் இருக்கும். ஆனால் அது எங்களுக்கு விளங்கேல்லை. எனக்கும் ஒரே பயமா இருந்தது... வெளிக்கிட்டு வந்தன்...'

சிறிது நழுவினால் மரணம் கௌவிக் கொள்ளும் என்ற நிலையில் ஒவ்வொருவருமே இருப்பதை எண்ணிப் பார்த்தாள் மேரி. நியாயங்கள் எல்லாம் அநாதைகளாகி விட்டன.

சிறிது நேர மௌனத்தின் பின் கிறிஸ்ரோபரே சொன்னான்.

> உங்கள் எண்ணங்கள் எப்படியோ அப்படித்தான் வாழ்க்கையும், அமையும், எனவே சிறந்ததையே எண்ண முயற்சி செய்யுங்கள்.
>
> **மார்க்கஸ் அரேலியஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

“எனக்கு ஒரு விசித்திர ஆசை ”

“சொல்லுங்கோ...”

“ஈ சோப்பின் கதை தெரியுமே உங்களுக்கு?”

“எதைச் சொல்லுறியள்?”

“பண்டைய உரோமாபுரியிலே கிரேக்கத்து அடிமையளை ஒரு வெளியிலே விட்டு, நல்ல பசியோடை இருக்கிற சிங்கம் முதலிய காட்டு விலங்குகளை... அந்த அடிமையளைச் சாப்பிடவெண்டு உள்ளுக்குக் கொணந்து விடுவினமாம். இந்த நிகழ்ச்சி உரோமா புரியின்ரை வருடாந்த விழாவிலே நடக்குமாம். இதைச் சனங்கள் எல்லாம் சுத்தியிருந்து பாக்குமாம் ..”

“......ம்......”

“ஈசோப்பும் அப்பிடி ஒரு அடிமைதான். அவன் முள் எடுத்துக் காப்பாத்தின ஒரு சிங்கம் அவனுக்கு மேலே ஏவி விடப்பட்ட படியாலே அது அவனைக் கொல்லாமல் அவனை நக்கி விடுது ..”

“..... ம்......”

“அப்ப உரோமாபுரியிலே செய்தமாதிரி... இப்ப கொலை வெறி பிடிச்சு அப்பாவிச் சனங்களைச் சுடச் சொல்லிக் கட்டளை இடுகிற, சுட்டுக் கொண்டு திரியிற அதிகார வெறி பிடிச்சு அலையிற அரசியல் வாதியளையும் அவையின்ரை கூலிகளையும் கைப் பொம்மைகளையும்... ஒரு வெளியிலே விட்டுக் காட்டிலே இருக்கிற சிங்கங்களைக் கொண்டு வந்து விடவேணும் அதுகள் அவையளைக் கொலை செய்யிறதைப் பொதுமக்கள் எல்லாரும் சுத்தியிருந்துபாக்க வேணும்.. ”

கிரிஸ்ரோபரின் குரலில் சுருதி ஒவ்வொரு சுரமாகக் கடந்து வந்து உச்சத்தில் இருந்து அந்தக் கேள்வியை வீசுகிறது.

“என்ரை விருப்பம் சரியோ பிழையோ?” அவனது குரல் ஓர் அக்கினிக்கோட்டைக் கிழிப்பதை அதிசயமாய் மேரி பார்த்துக் கொண்டிருக்கையில் தன் பொக்கற்றில் இருந்து ஒரு பிளேட்டை எடுத்துத் தானே தனது கையில் ‘சர்’ என்று ஆழமாக வெட்டினான் கிரிஸ்ரோபர். அதிலிருந்து வெளியேறும் குருதியை ஒரு வித மகிழ்வுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனுக்குள் சூழாகும் வெறியை ஒரு வித அச்சத்துடன் சில கணங்கள் பார்த்த மேரி ஓடிப்போய் ஒரு ‘பிளாஸ்ரர்’ கொண்டு வந்து கொடுத்தாள்.

“இந்தாங்கோ... இதைப் போடுங்கோ...”

“தேவையில்லை ”அவன் அதைத் தட்டிவிட்டான்.

“வெளிச் சூழலாலை நாங்கள் எல்லோருமே நல்லாப் பாதிக்கப் பட்டிருக்கிறம் நாங்கள் இனி எங்கடை படிப்பை நல்ல மனநிலையிலை தொடர முடியுமோ எண்டு சொல்ல முடியாது. என்னை மாத்திரமில்லை... உங்களையும் வெளிச் சூழல் நல்லாப் பாதிச்சிருக்கெண்டு தெரியுது. ஆனால் நாங்கள் ஒருத்தருக்கொருத்தர் ஆறுதல் சொல்லிக் கொள்ளுறதைத் தவிர வேறை ஒண்டும் செய்ய முடியாது. காயத்துக்குப் பிளாஸ்ரரைப் போடுங்கோ .. இல்லாட்டி ‘இன்பெக்ற்’ பண்ணிப்போடும்...”

அவன் ஏற்றுக் கொள்ளவில்லை.

“பழந்துணி கொண்டு வரட்டே? ‘பிளீடிங்’கை நிப்பாட்டுங்கோவன்..”

“ஒண்டும் வேண்டாம் ” அவள், அவன் தன்னைப் போலவே ஒரு சாதாரணன் என்று நினைத்து உதவ முயன்றாள். ஆனால் பாவம் மேரி... கிரிஸ்ரோபர் ஒரு “சாடிஸ்ற்” என்பது அவளுக்கு அன்று வரை தெரிந்திருக்கவில்லை.

(தொடரும்)



**மனைவி:** ஏனப்பா இளைக்க இளைக்க வாறீங்கள்!


**கணவன்:** இளைப்போ! ஹூம், லாபம் எண்டு சொல்லு பஸ்ல ஏறுமா பின்னாலையே ஓடி வந்தனான். ரெண்டு ரூபா மிச்சம்.



**மனைவி:** நீங்கள் எப்பவும் இப்பிடி விசர் வேலைதானே செய்றநீங்கள். ஓடித்தான் வாறீங்கள், ஒரு டாக்சிக்குப் பின்னால ஓடிவரக் கூடாதே? இருபது ரூபா மிஞ்சியிருக்குமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# அப்போஸ்தலர் பணி XIII

க. பொ. த. உயர்தரம்

## கொரிந்து நகரில் சின்னப்பர்

சின்னப்பர் ஏத்தென்ஸ் நகரை விட்டுச் சென்றபொழுது மகிழ்ச்சி குன்றியவராகச் சென்றார் எனப் பார்த்தோம். அவரது உடல் நலமும் சற்று பாதிக்கப்பட்டிருந்தது. உடலில் தைத்த முள் போன்று அவரது நோய் அவரை வாட்டியது. சின்னப்பர் ஒரு குருடனைப் போன்று தள்ளாடி கொரிந்து நகரினுள் நுழைந்தார்.

கொரிந்து நகர் ஏத்தென்சிலிருந்து 64கி.மீ தொலைவில் இருந்தது. கொரிந்து ஒரு வாணிபத் தளமாகவும், குறைந்த கலாசாரத்துடனும் விளங்கியது. இரவு விடுதிகளும், தீய நெறிகளும் மலிந்திருந்தன. ஒருவனை 'கொரிந்தியன்' என அழைப்பது அக்காலத்தில் கேவலமாகக் கருதப்பட்டது.

கொரிந்தில் நுழைந்த சின்னப்பர் தனது வாழ்க்கையை ஓட்டுவதற்காக ஒரு தொழில் தேட வேண்டியிருந்தது. அக்கிலா, பிரிஸ்கிலா என்பவர்களிடம் அவருக்கு வேலை கிடைத்தது. அவர்களிருவரும் கிலவுதியு பேரரசன் காலத்தில் உரோமையிலிருந்து நாடு கடத்தப்பட்ட யூதர்களாவர். கிலவுதியு பணத்துக்கு ஆசைப் பட்டு யூதர்களை நாடு கடத்தி அவர்களது சொத்துக்களைச் சூறையாடினான். அவர்களிருவரும் கிறிஸ்தவர்களாக இருந்தது சின்னப்பருக்கு ஆச்சரியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது. அவர்கள் பணம் படைத்தவர்களாகவும் இருந்ததால் சின்னப்பர் அவர்களது உபசரிப்பில் அவர்களோடு தங்கினார். அவர்கள் வாயிலாக உரோமையில் இருந்த திருச்சபை பற்றி அறிந்திருப்பார். தானும் ஒரு நாள் உரோமையைத் தரிசிக்க வேண்டும் என்ற உறுதி பூண்டிருப்பார்.

இங்கும் முதன் முதலில் யூதர்களுக்கே போதிக்கின்றார். யூதர்கள் எதிர்பார்த்திருந்த, நம்பியிருந்த மெசியாவே இயேசு என்பதே அவரது போதனையின் கருவாக அமைந்தது. சீலாவும் திமோத்தேயுவும் பெரேயாவிலிருந்து திரும்பியவுடன் அவர்களும் சின்னப்பருடன் சேர்ந்து நற் செய்தியை அறிவித்தனர்.

ஒரு சிலர் அவரது வார்த்தையை ஏற்றுக்கொண்டாலும் பலர் அவரை எதிர்த்து நற்செய்தியைப் புறக்கணித்தனர். அவர்களிடமிருந்து புறவினத்தாரிடம் செல்வதன் அடையாளமாகத் தனது ஆடையை அவர்கள் மத்தியில் கிழித்து விட்டுச் சென்றார். செபக்கூடத்தில் இனிமேல் போதிக்க முடியாது என்பதால், கடவுள் பயமுள்ள தித்தியு யுஸ்து என்ற உரோமையனின் அழைப்பை ஏற்று அவனது வீட்டில் இருந்து கொண்டு மறைபரப்புப் பணியைத் தொடர்ந்தாற்ற உறுதி பூண்டார். ஓரிரவு ஆண்டவர் காட்சியளித்து அவரை உற்சாகப்படுத்தியதால் அவர் கொரிந்தில் தங்கியிருக்க வேண்டும் எனத் தீர்மானித்தார். இதனால்தான் சின்னப்பர் ஏறக்குறைய 1½ வருடங்கள் அங்கு பணியாற்றியதாகக் குறிப்பிடப்படுகின்றது.

## திருச்சபையை நிறுவுதல்

கொரிந்து நகர மக்கள், ஏத்தென்ஸ் நகர மக்களைப் போன்று கல்விமான்களுமல்ல பண்பாட்டில் உயர்ந்தவர்களுமல்ல ஆனால் பணம்

வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தினால் எல்லோருமே சூரியனைப்போல்பிரகாசிக்க முடியும். இல்லையென்னில் மெழுகு வர்த்தி தான். O நெப்போலியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

படைப்பதிலும் அதன் வழி சுக போகங்கள் அனுபவிப்பதுமே அவர்கள் குறிக்கோளாக இருந்தது. ஆயினும் சின்னப்பரின் தொடர்ச்சியான போதனையினால் பலர் மனந்திரும்பினார். கிறிஸ்பு என்ற செபக்கூட்டத் தலைவனும், ஏராஸ்து என்ற நகர ஆளுநனும் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். கொரிந்தியருக்கு எழுதிய மடலில் காயு, ஸ்தெபானுஸ் ஆகியவர்களையும் குறிப்பிடுகின்றார்.

சின்னப்பர் கொரிந்து நகரில் ஏற்படுத்திய சபை பல பிரச்சனைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. சுகபோகங்களையே அனுபவிப்பதையே குறிக்கோளாகக் கொண்ட மக்களைத் திருத்தியமைப்பது சுலபமானதல்ல. தான் சென்ற பிறகு இத்தகைய மக்களை வழிநடத்தக் கூடிய நல்ல தலைவர்களைத் தெரிந்து பயிற்சியளித்தார். நற்கருணை விருந்து கொண்டாடப்பட வேண்டிய வழி முறைகளையும் சொல்லிக் கொடுத்தார். அற்ப காரணங்களுக்காகப் பிளவுகளை ஏற்படுத்தக்கூடாது எனவும் வலியுறுத்தினார். ஏனெனில் அவர்களில் சிலர் 'சின்னப்பரைச் சேர்ந்தவர்' 'இராயப்பரைச் சேர்ந்தவர்' 'அப்பொல்லோவைச் சேர்ந்தவர்' என்ற பிரிவினைகளை வளர்த்து வந்தனர்.

## யூதர் புறக்கணிப்பு

எவை எப்படியிருந்தும் கொரிந்து நகரில் சின்னப்பரின் பணி முழுமையாக வெற்றியடைந்தது எனக்கூறமுடியாது. சில யூதர் புரட்சி செய்தனர். அவரைக் கல்லியோன் என்ற ஆளுநனுக்கு முன் இழுத்து வந்து பொய்க் குற்றம் சாட்டினர். அவர்களது எண்ணம் கல்லியோன் மூலம் சின்னப்பரைத் தண்டிப்பது அல்லது கொன்று விடுவதுதான். ஆனால் அவர்களது எண்ணம் நிறைவேற கல்லியோன் இடம் கொடுக்கவில்லை. கல்லியோன் யூதர்களுக்குச் செவிசாய்க்க மறுத்து, தனக்கு அவர்களின் மத சம்பந்தமான பிரச்சனைகளில் அக்கறையில்லை என்று கூறி விட்டான். தங்களது ஏமாற்றத்தினால் எழுந்த கோபத்தின் பிரதிபலிப்பாகச் செபக்கூடத்தலைவன் சொஸ்தேனேயைப் பிடித்து அவனுக்கு முன்னாலேயே அடித்தனர். ஆயினும் கல்லியோன் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

## அந்தியோக்கியா திரும்புதல்

சின்னப்பர் பாஸ்காவுக்கு எருசலேம் செல்ல விரும்பினார். இன்னும் அவர் ஒரு யூதராக இருந்தமையால் முடிவெட்டுவதாக பொருத்தனை செய்திருந்தார். அதன்படி மொட்டையடித்து 30 நாட்கள் முடியை வளர விட்டு பின்னர் எருசலேமில் அந்த முடியையும் வெட்டி ஆலயத்தின் பீடத்தில் எரிப்பது வழக்கமாக இருந்தது. எனவே தான் கெங்கிரைத் துறையில் முதன் முதல் முடியை வெட்டிக் கொண்டார். 30 நாட்கள் முடிவதற்கிடையில் எருசலேம் திரும்ப வேண்டும்.

எனவே சின்னப்பர் அக்கில்லா, பிரிஸ்கிலா என்பவர்களுடன் கொரிந்து நகரை விட்டுச் சென்றார். முதலில் எபேசுக்குச் சென்றனர். அங்கு சென்று செபக் கூடத்தில் யூதத் தலைவர்களுடன் உரையாடினார். எபேசு நகர மக்கள் அவரைத் தங்கும்படி வற்புறுத்தினர். ஆயினும் தற்போது நேரமில்லை எனவும், கடவுள் அனுமதித்தால் மீண்டும் வருவதாகக் கூறி விட்டுச் சென்றார். சின்னப்பரும் அவரது தோழர்களும் எபேசிலிருந்து கப்பலில் புறப்பட்டு செசாரியாவில் இறங்கி எருசலேமுக்குச் சென்றனர். அங்குள்ள சபையினரைப் பார்த்து விட்டு அந்தியோக்கியா திரும்பினர். இவ்விதமாகச் சின்னப்பரின் மற்றொரு பயணம் முடிவுற்றது.

## வினாக்கள்

1. அக்கில்லா, பிரிஸ்கிலா என்பவர்களைக் கண்டதில் சின்னப்பர் ஏன் மகிழ்ந்தார்.
2. சின்னப்பர் கொரிந்து நகரில் $1\frac{1}{2}$ வருடங்கள் தொடர்ந்து பணியாற்ற தூண்டுகோலாய் அமைந்தவை எவை?
3. கொரிந்து நகரில் சின்னப்பர் நிறுவிய திருச்சபை எத்தன்மையுடையதாய் அமைந்தது?
4. சந்தர்ப்பம் கூறுக: ''அஞ்சாதே, போதித்துக் கொண்டேயிரு, நிறுத்தி விடாதே''
5. ஆளுநன் கல்லியோன் ஏன் யூதர்களின் முறைப்பாட்டை ஏற்று சின்னப்பரைத் தண்டிக்கவில்லை?
6. சின்னப்பர் எதற்காக எருசலேமுக்குச் செல்ல அவசரப்பட்டார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நீதியின்றி சமாதானமா?

● எஸ். நிலான்

'போர் வேண்டாம், எமக்கு சமாதானம் வேண்டும்' என்பது எமது தமிழ் மக்களின், ஏகோபித்த கூக்குரல் ஆகும். இன்று, நம் பிரதேசம் மட்டுமல்ல, உலகில் எந்த நாட்டிலும், சமாதான அன்னையின் அரவணைப்புத்தேடி, மக்கள் ஓடி அலைகின்றனர்; அங்கலாய்க்கின்றனர். சமாதானம் என்பது அமைதியின் வடிவம், அன்பின் சிகரம், பரஸ்பர உணர்வுகளின் ஆனந்த கீதம், இந்த சமாதானம் என்பது நிரந்தரமானது. இதனால்தான் தானங்களில் சிறந்த தானம், சமாதானம் என்று அறிஞர் உரைக்கின்றனர். சமாதானமானது உண்மைநெறிகளை, அதன் வழிகளை உள்ளடக்கும் போதே அது மனித உள்ளங்களில் அமைதியைப் பொங்கியெழச் செய்கின்றது. நீதிதான் சமாதானக் கட்டிடத்தின் அடித்தளம். இதனால் நீதியின்றி சமாதானமா? என்ற கேள்வி எழுவது நியாயமானது.

இன்று எமது கிறிஸ்தவ கண்ணோட்டத்தில், சமாதானத்தின் மாண்பு பற்றி பேசப்படுகின்றது. 'சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள்' எனப்படுவர் என்று இயேசு மலைப்பொழிவில் பொழிகின்றார். பட்டினிச்சாவுகளாலும், பயங்கர வாழ்க்கை முறைகளாலும், படைக்கல ஆதிக்கங்களாலும் ஆட்கொள்ளப்படும் உலகிற்கு, நிரந்தர சமாதானம் வேண்டித் திருச்சபை தனது நற்செய்தி பணிகளைப் சட்டமைக்கின்றது. 'உலக சமாதானம் வேண்டுமானால் உயிரைக் காப்பாற்றுங்கள்' என்று திருத்தந்தை ஆரும் சின்னப்பர், நீதியான வாழ்விற்கு அறைகூவல் விடுக்கின்றார்.

இன்று மனித மாண்புகள் மடிந்து, ஒடிந்து போகின்றன. அரசியல் ஆதிக்க வெறிகள் தறிகெட்டு பாய்கின்றன. அநீதிகள் இன்று தலை தூக்குகின்றன. இதன் மத்தியில், நாம் எவ்வாறு சமாதானம் தேடமுடியும் என்பது திருச்சபையின் கேள்விக்கணை. இரண்டாம் வத்திக்கான் சங்கம் நீதியே சமாதானத்தின் வித்து என்று கூறுகின்றது. இதனால் நீதியின்றி சமாதானம் உதிக்க முடியாது.

இன்றைய நம் சமூக அரசியல் வாழ்க்கையில், சமாதானம் என்று நாளாந்தம் கூக்குரல் இடுகின்றோம். இன்று குடும்பங்களில் பிளவுகள், நாட்டில் பிரிவினைகள் புற்று ஈசல் போல பெருகக் காரணம்என்ன? எப்படி சமாதானம் பெறுவது என்ற கேள்விக்கணை நம்மை நோக்கி விடப்படுகிறது. நீதி தேவனைப் புறக்கணித்து, எவரும் சமாதானம் தேட முடியுமா? எம் ஆட்சித் தலைவர்கள் சமாதானம் வேண்டி, எத்தனை வட்டமேசை மாநாடுகளையும், அமைதி ஒப்பந்தங்களையும் கைச்சாத்திட்டனர். இன்று எமக்கு சமாதான வாழ்வு வந்துவிட்டதா? எம்மிடம் வந்த சமாதானப் புறாவின் இறக்கைகள் துண்டிக்கப்பட்டது எதனால்? ஆட்சித் தலைவர்களின் நீதியற்ற தீர்மானங்களும், மதியீனம் அற்ற செயல்பாடுகளுமே எனறு கூறலாம்.

எனவே சமாதான விரும்பிகள் அனைவரும்! நீதியைத்தம் அடிச்சுவடாக அமைக்க வேண்டும். ஆட்சித் தலைவர்கள், ஆளப்படுவோர்க்கு இடையே உள்ள, வர்க்க பேதங்கள் சிதைக்கப்பட வேண்டும். அநீதியான செயற்பாடுகள் நீங்கவேண்டும். நீதி எம் மத்தியில் தங்கவேண்டும். அப்போதே சமாதானம் பொங்கியெழும், நீதியின்றி சமாதானம் நிச்சயம் உருவாக முடியாது. அப்படி உருவாகினாலும், அது நீர்க்குமிழி போன்று மறைந்து விடும்.

**''நீதியை அடித்தளமாகக் கொள்ளுவோம் சமாதான வாழ்க்கையை அமைத்திடுவோம்''**

# கிறிஸ்தவ ஒழுக்க நெறிக் கோட் பாடுகள்

## கிறிஸ்துவே அளவுகோல்

அனைத்து கிறிஸ்தவ ஒழுக்கநெறிக் கோட்பாடுகளுக்கும் அளவு கோலாக, கருப்பொருளாகக் கிறிஸ்துவே காணப்படுகின்றார். அறநெறி வாழ்வின் ஆரம்பப் பொருளாகவும் முடிவுப் பொருளாகவும் கிறிஸ்துவே விளங்குகின்றார். வர்ண ஜாலங்களைக் காட்டும் வானவில்லைப் போலல்லாது "நானே வழியும் உண்மையும் உயிரும்" (அரு. 14:16) என்று கிறிஸ்து அழிவில்லாத வாழ்வுக்கு உண்மையான, உறுதியான வழிகாட்டியாகத் திகழ்கின்றார். அறநெறிக் கோட்பாடுகளின் அளவுகோல் வெறும் சித்தாந்தமோ அல்லது கொள்கையோ, கனவோ அல்லது கற்பனையோ அல்ல. போஞ்சியு பிலாத்துவின் அதிகாரத்தில் சிலுவையில் அறையுண்டு, மரணித்து மூன்றும் நாள் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றில் ஒரு திருப்புமுனை. கிறிஸ்துவே அனைத்து கோட்பாடுகளினது கருவூலமாகவும் விளக்கமாகவும் திகழ்கின்றார். ஒழுக்க நெறிக் கோட்பாடுகள் நிறைவு பெறுவது கிறிஸ்துவிலேதான்.

## ஒழுக்க நெறியின் தன்மை

வரலாற்றின் ஆரம்பத்திலிருந்தே மனிதன் தனது செயற்பாடுகளைப் பொறுத்தவரை நெறித்தன்மையில் சிரத்தையுடையவனாகவே காணப்பட்டான். கோட்பாட்டு ரீதியிலும் செயற்பாட்டு ரீதியிலும் திருப்தி தரும் விடையைத் தேடுவதிலே வேட்கையுடையவனுயிருந்ததோடு அவன் தன் எதிர்பார்ப்புக்களை நிறைவுசெய்ய விளைந்தான். அத்தோடு அவன் மற்றவர்களோடு தொடர்பு கொள்வதால் ஏற்படும் தாக்கங்களை உணர்ந்தான். மனித நம்பிக்கைகள், வாழ்க்கையைப் பற்றிய அடிப்படைக் கேள்விகள், வாழ்க்கையின் அர்த்தம், மனித இலட்சியங்கள் போன்றனவற்றிற்கு விடைகாணும் படலமே மனித வரலாற்றின் தொடர்கதையாகின்றது. ஒருவன் தனது வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரியாமல் தன்னைப்பற்றியே தெரிந்துகொள்ளாமல் அவனது நடத்தையின் உள்ளார்ந்தத்தைப் புரிந்து கொள்ளமாட்டான். அவன் தன்னைப்பற்றி அல்லது தனது வாழ்க்கையைப் பற்றி புரிந்து கொள்ள அவன் தனது வாழ்க்கையின் நோக்கத்தை அறிந்தவனுயிருத்தல் வேண்டும். "நான் யார்?" என்ற கேள்விக்கு விடை "நான் ஏன் பிறந்தேன்?" அல்லது "நான் ஏன் இந்த உலகில் வாழ்கின்றேன்?" என்ற கேள்வியின் பதிலிலேயே தங்கியுள்ளது. ஒழுக்கநெறியின் தன்மை பற்றிய படிப்பிற்கு இன்றியமையாதது மனிதன் இறுதி இலட்சியம் பற்றிய ஆராய்வேயாகும். ஏனெனில், ஒழுக்கநெறியின் வரையறை மனிதனின் கடைசிக் குறிக்கோளேயாகும். மனிதனின்

---

**தகுதி என்ன?**

எந்த வேலையைச் செய்யத் தனக்குத் தகுதி உள்ளது என்பதை அறிந்து அந்த வேலையைச் செய்ய வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்வதே இன்பத்திற்கான முதல் திறவுகோல்.

ஜான்டுலி

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இறுதி இலட்சியத்தை நிறைவேற்றுபவையாக மனித செயற்பாடுகள் அமையும் போது அவை நல்லவை எனப்படுகின்றன, மாருக அவை இக்குறிக்கோளுக்கு முரணுனவையாக அமையும் போது தீயவை எனப்படுகின்றன.



ட. வின்சென்ற் பற்றிக்
O. M. I, B. Th. B. A.

## ஒழுக்க முறை அமைப்பு

ஒழுக்கமுறை அமைப்பானது ஒருவனை முழுமைப்படுத்துவதிலே, வளமான வாழ்வுக்கு வழிப்படுத்துவதிலே துணைநிற்பதோடு சமுதாய வளர்ச்சிக்கும் சமுதாயச் சீராக்கலுக்கும் இட்டுச்செல்லும் ஒன்ருக இருக்கின்றது. ''நான் என் தந்தையின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவரது அன்பில் நிலைத்திருப்பது போல நீங்களும் ஒருவர் மீது ஒருவர் அன்பு கூர வேண்டும் என்பதே எனது கட்டளை'' (அரு. 15:10-12) என்ற கிறிஸ்துவின் கூற்று சமுதாய கோட்பாடுகளுக்கு பிறர்நலமும் ஒத்துழைப்பும் இன்றியமையாதது என்பதை விளக்குகின்றது. மனிதன் மனிதனேடு கொள்ளும் உறவாடலில் ஒருங்கிசைவு, மனிதன் இறைவனேடு கொள்ளும் தொடர்புகளில் ஒருங்கிணைவு போன்றவை ஒழுக்கநெறி அமைப்பின் பிரதிபலிப்பேயாகும். ஒருவனது உள்ளத்தின் அடித்தளத்தில் இயற்கையாக அமைந்திருக்கும் ஒழுங்குக் கிரமங்களைக் கண்டுணர்வதற்கு ஒழுக்கமுறை அமைப்பு உதவுகின்றது.

ஒவ்வொரு தனிமனிதனிடத்திலேயும் பல் வேறுபட்ட முரண்பாட்டுத் தன்மைகள் காணப்படுகின்றன. ஒழுக்க முறை அமைப்பை நன்குணர இவ்வகை முரண்பாடுகளையும் தெரிந்துகொள்ளல் அவசியமாகும். இதனுற்ருன், புனித சின்னப்பர், ''நன்மை செய்யும் விருப்பம் என்னிடமில்லாமல் இல்லை. அதை செய்யத்தான் முடியவில்லை; நான் விரும்பும் நன்மையைச் செய்வதில்லை, விரும்பாத தீமையையே செய்கின்றேன்'' (உரோ. 7 : 20) என்று கூறுகின்ருர். இது ஒழுக்கநெறி வாழ்க்கை வாழ்வது எவ்வளவு கடினம் என்பதையே உணர்த்துகின்றது.

வாழ்க்கைக்கு முடிந்த பொருள் தரக் கூடிய ஒன்றின்மீதே ஒழுக்கமுறை அமைப்பு கட்டப்படவேண்டும். அப்போதுதான் இவ்வமைப்பு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாய் இருக்கும். ஆளுக்கொரு சட்டம் என்ற ரீதியில் தனிப்பட்ட நபர்களினது சௌகரியங்களை நிறைவுசெய்யும் ஒன்ருக ஒழுக்க நெறி அமைப்பு காணப்படும்போது அங்கே சிக்கல்களும் குழப்பங்களும் தான் மலிந்து கிடக்கும். அது ஒழுங்கீனத்தையே வளர்க்கும்.

இறைத்தன்மையுள்ள மனிதனின் மனச் சான்றுக்கும் ''தான்'' என்ற தன்னல அகந்தைக்குமிடையே என்றும் போராட்டம் நிகழ்ந்த வண்ணமேயிருக்கின்றது. ''உள்ளத்தின் உட்குரல்'' என சோக்கிரட்டீசினுல் வர்ணிக்கப்படும் மனச்சான்று திரிவுபடாத தூய நிலையில் இறைவனின் குரலேயாகும். எந்தெந்த வேளைகளில் எதைச் செய்ய வேண்டும் என்று நிலையான உண்மைக்குச் சார்பாகக் கட்டளை பிறப்பிப்பது மனச்சான்றேயாகும். ''மனச்சான்று மனிதனின் மிகமறைவான மையமும் திருவிடமுமாகும். அங்கே

> **பிறப்பில் ஒருவன் அறிஞனுகவோ, கவிஞனுகவோ பிறப்பதில்லை, வாழ்க்கை அனுபவங்களில் தான் உருவாகிருன். இல்லை உருவாக்கப் படுகிருன்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவன் கடவுளோடு தனித்திருக்கிருன். அவன் உள்ளத்திலே அவருடைய குரல் எதிரொலிக்கின்றது. கடவுளுக்கும் பிறருக்கும் காட்டும் அன்பால் நிறைவேறும் கட்டளையை மனச்சான்று வியத்தகுமுறையில் வெளியிடுகிறது" (இன். உல. திரு. 16)

ஒழுக்கநெறி அமைப்பை நிலையான, மாற்றம் எதுவுமில்லாத சட்ட திட்டங்களாக வரையறைத்துக் காணும்போது அதன் முழுமையான உட்பொருளை அழித்துவிடுகிருேம். ஒழுக்கநெறி அமைப்பு ஒரு மேல் வரிச்சட்டமேயாகும். ஆனல் இவற்றின் பிரயோகம் ஒவ்வொரு சூழ்நிலைக்குத் தக்கவாறும் ஒவ்வொருதனி நபருக்கு ஏற்றவாறும் மாறுபடும். ஒவ்வொரு ஒழுக்க நெறிச் செயலும் ஏதாவதொரு வகையில் புதுமையானதாகவும் ஆக்கமானதாகவும் தனிப்பட்ட முறையிலும் வெளிப்படுத்தப்படும். ஒவ்வொருவனது தனித்தன்மையோடு ஒழுக்கநெறி தொடர்புபட்டது.

—தொடரும்—



ஒருவர்:- அருளப்பு அண்ணே! நீங்கதான் எனக்கு ஒரு 'ஐடியா' தரவேணும். புதுசா ஒரு தொழில் தொடங்க வேணும் எண்டு நினைச்சிருக்கிறன். எங்கட நாட்டில செல்வாக்கான ஒரு தொழிலா இருக்க வேணும், சொல்லுங்க பாப்பம்.

பெரியவர்:- தம்பி! எங்கட நாட்டில இப்போதைக்கு நஷ்டமே வராத தொழில் ஒண்டுதான். சவப்பெட்டிக் கடை ஒண்டு போடும், தொழிலுக்குத் தட்டுப்பாடே இருக்காது.

## அமலமரித் தியாகிகள் தலைவர்

## இலங்கை விஜயம்

அமலமரித் தியாகிகளின் உயர் தலைவர் அதிவண. மார்சல்லோ சாகோ அவர்கள் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த ஓகஸ்ற் திங்கள் 6ம் நாள் கொழும்புக்கு வந்தார். 28ம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்த இவர் கடந்த ஓகஸ்ற் 19ம் திகதி அன்று கிழக்கு மாகாண நகரான திருகோணமலைக்கு வந்தார். திருகோணமலையில் உள்ள பாலையூற்று, சின்னக்கடை ஆகிய பங்குகள் அமலமரித்தியாகிகளின் பரிபாலிப்பில் உள்ளன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. அன்று மாலையே கொழும்பு திரும்பிய சாகோ அவர்கள் தமது இலங்கை விஜயத்தின் போது வட பகுதிக்கும் சென்றிருந்தார்.

இத்தலியரான இவர் கம்போடியாவில் நீண்ட காலம் பணியாற்றியவர். 1973க்குப் பின் வத்திக்கானில் மதங்களுக்கிடையே கலந்துரையாடலுக்கான செயலகப் பொறுப்பாளராகப் பணியாற்றினுர். 1986ல் சபைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

சிப்பாய் ஒருவன் துப்பாக்கியைப் போற்றுவது போலவும், இசைக் கலைஞன் வீணையைப் போற்றுவது போலவும். பெண் தன் கணவனைப் போற்றுகிருள்.

பெர்னுட்சா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 100 ஆண்டு கண்ட

# தன்னாமுனை புனித வளனார் வித்தியாலயம்

## சிறப்புப் பேட்டி

மட்டக்களப்பு, தன்னாமுனைக் கிராமத்தில் அமைந்துள்ள புனித வளன் வித்தியாலயம் தனது நூற்றாண்டு விழாவை இவ்வாண்டில் கொண்டாடவிருக்கிறது.

1874ம் ஆண்டளவில் பாடசாலை அமைப்பதற்கான நிலம் வாங்கப்பட்டதாகத் தெரிகிறது. இப்பாடசாலை மட்டக்களப்புப் பகுதியில் உள்ள பழம்பெரும் பாடசாலைகளில் ஒன்று.

யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் கீழ் திருகோணமலை - மட்டக்களப்புப் பகுதிகளுக்கு பேரருள் திரு பொன்ஜியன் ஆண்டகை பொறுப்பாளராக இருந்த காலத்தில் அருள் திரு பிரான்சிஸ் சேவியர் என்பவரால் இப் பாடசாலை உருவாக்கப்பட்டது.


சுதேச மொழிகளில் மக்களுக்குக் கல்வி அறிவை வழங்க வேண்டும் என்ற ஆயரின் இலட்சியக்கனவை நனவாக்க உருவானது இப் பாடசாலை. இப்பாடசாலை பற்றிய வரலாற்று ரீதியான பதிவுக்குறிப்புகள் எதுவும் கிடைக்காமற் போனது கவலை தருவதாக உள்ளது. இருந்தவைகளை 1978ம் ஆண்டு கிழக்குப்பகுதியில் வீசிய சூறாவளி சூறையாடிச் சென்றது. இதனால் ஏறக்குறைய அரை நூற்றாண்டு கால வரலாறு தெரியவில்லை.

இப்பாடசாலை ஆரம்பித்து ஏறக்குறைய 64 ஆண்டுகளுக்குப்பின் இதனோடு தொடர்பு கொண்டவரும், ஏழு ஆண்டுகளாக தலைமை ஆசிரியராகக் கடமை ஆற்றியவருமான திரு. K. ஜோசப் ஆசிரியரவர்களை சந்தித்து இப் பாடசாலையின் வரலாறு பற்றி வினவினோம். அவர் கூறினார்.

○ நான் 1938 ம் ஆண்டு முதல் 1945ம் ஆண்டுவரை தன்னாமுனை புனித வளனார் வித்தியாலயத்தில் படிப்பித்தேன். அப்போது பாடசாலைகள் மதநிறுவனங்களின் பொறுப்பில் இருந்த காலம். தன்னாமுனைப் பங்குத்தந்தை அருள்திரு டிலாய் என்பவரே எமது பாடசாலைக்கு முகாமையாளராய் இருந்தார். இப்போதுள்ள இடத்தில் பாடசாலை அப்போது இருக்கவில்லை இப்போதுள்ள இடத்துக்கு எதிர்புறத்தில் ஆலயவளவுக்கு அருகாமையில் இருந்தது. ஓலையால் வேயப்பட்ட ஒரு பெரிய குடிலாகவே பாடசாலை தோற்றமளித்தது. பிள்ளைகள் அமர்ந்து படிக்க வாங்குகளோ மேசைகளோ இருக்கவில்லை. சீமெந்தினால் கட்டப்பட்ட நீண்ட கட்டுக்களிலிருந்தே மாணவர்கள் படித்தனர். மயிலாம்பாவெளி முதல் தாழையடி வரையுள்ள பிள்ளைகள் சுமார் 150 பேர்வரை பாடசாலையில் கல்வி கற்றனர். இவர்களுக்குக் கற்பிக்க நான்கு ஆசிரியர்கள் பணியாற்றினோம். 5ம் வகுப்பு வரை கற்பிக்கப்பட்டது. நான் பணியாற்றிய காலத்தில் அருள்திரு. வம்பேக், அருள்திரு. சந்தானம், அருள் திரு. அலோசிங் என்று பல முகாமையாளர்கள் வந்து போயினர். பாடசாலையில் படிப்பித்தல் சீராக நடைபெற்றதே தவிர பெரிய அபிவிருத்தி எதுவும் ஏற்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




பாடசாலைச் சின்னம்

(இவ்வாறு தமது ஏழாண்டு கால அனுபவத்தைச் சுருக்கமாகக் கூறினர். திரு. K. ஜோசப் ஆசிரியரவர்கள். இதற்கு முந்திய வரலாறு எதுவும் தமக்குத் தெரியவில்லை என்றும் தெரிவித்தார். ஏறக்குறைய 1950ம் ஆண்டுகளில் தான் தற்போதுள்ள இடத்தில் புனிதவளனூர் வித்தியாலயம் கட்டடமாக எழுந்தது. ஐம்பதுகளின் நடுப்பகுதியில் தலைமை ஆசிரியராக இருந்த திரு. சந்தியாப்பிள்ளை சவரிமுத்து ஆசிரியரவர்களைச் சந்தித்தோம்)

○ நான் 1956 ஜனவரி முதல் 1960 மே வரை தன்னுமுனை புனித வளனூர் பாடசாலையில் பணியாற்றினேன். அப்போது கத்தோலிக்க மதபீடமே பாடசாலையை நிர்வகித்தது.

இவ்வாறு கூறிய அவரிடம் அப்போதைய நிர்வாகத்தின் போக்குப் பற்றி வினவினேம்.


○ அப்போது நிர்வாகம் மிகச்சிறப்பாக இருந்தது. அநாவசியத் தலையீடுகளோ தொல்லைகளோ இருக்கவில்லை. எமது கடமைகளை நாம் சிறப்பாகவே செய்தோம். எங்களுக்குப் போதுமான சம்பளம் வழங்கப்பட்டது. பல் வேறு சலுகைகள் கிடைத்தன. அரசாங்கப் பாடசாலைகளில் பணியாற்றுவதை விட மதநிறுவனங்களின் கீழ் உள்ள பாடசாலைகளில் பணியாற்றுவதையே நாம் விரும்பினேம். அங்கு பணியாற்றியது என்னுடைய அதிர்ஷ்டம் என்றே கூறுவேன்.

இவ்வாறு நிர்வாகச் சிறப்பு பற்றி மனநிறைவோடு கூறியவரிடம் உங்கள் காலத்தில் பாடசாலை இருந்த நிலை அதன் முன்னேற்றம் பற்றி கூறுங்கள் என்று கேட்டோம்.

○ நான் அங்கு பணியாற்றச் சென்றபோது தொண்ணூறு பிள்ளைகள் அங்கு கல்வி பயின்றார்கள். ஆறும் வகுப்புக்கு மேல் படிப்பதென்றால் அவர்கள் மட்டக்களப்பு - புளியந்தீவுக்கு வரவேண்டியிருந்தது. போக்கு வரத்து வசதிக் குறைவும், வறுமையும் மாணவர்களின் மேற் படிப்புக்குத் தடையாக இருந்தன. அத்துடன் தன்னுமுனை ஒரு மைய இடமாகவும், அப்போது நூறுவீதம் கத்தோலிக்க மக்கள் வாழும் இடமாகவும்இருந்ததால்இப்பாடசாலையை முன்னேற்றுவது, வகுப்புக்களை அதிகரிப்பது அவசியம் என்று கருதினேன். இதனை அப்போது தன்னுமுனை பங்குக்குருவாகவும், பாடசாலை முகாமையாளராகவும் இருந்த அருள்திரு F. M. செலர் அவர்களிடம் கூறினேன். அவரது அனுமதியுடன் மேலும் இரண்டு வகுப்புக்கள் அதாவது 7ம், 8ம், வகுப்புக்கள் தொடங்கப்பட்டன. வகுப்புக்களை அதிகரிக்க பிள்ளைகளின் தொகையையும் அதிகரிக்க வேண்டி இருந்தது. மாணவர்களின் போக்கு வரத்துப் பிரச்சினையைத் தீர்க்க அப்போதிருந்த திருமலை மறைமாவட்ட ஆயர் பேரருள்திரு கிளெனி ஆண்டகை வழங்கிய வாகனத்தின் உதவியுடன் பாடசாலை முகாமையாளரான அருள்திரு F. M. செலர் அவர்களே ஒவ்வொரு நாளும் காலையில் வாகனத்தில் தூர இடங்களுக்குச் சென்று வீடுவீடாகப் பிள்ளைகளை அழைத்துவருவார். பாடசாலை முடிந்ததும் அவரே மீண்டும் அவர்களை வீடுகளுக்கு அழைத்துச் செல்வார். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், பாடசாலை முன்னேற்றத்திற்கும் எம்முடன் சேர்ந்து முகாமைத்துவம் எந்த அளவு பாடுபட்டது என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



**ஆசிரியர்:-** நமது நாட்டில் மிகவும் மலிவான பொருள் என்ன?

**மாணவர்:-** துப்பாக்கி சேர்

**ஆசிரியர்:-** ? !

இவ்வாறு தமது காலத்தில் பாடசாலை அபி விருத்தி பற்றி விரிவாகக் கூறியவரிடம் இக் கால மாணவர்கள், ஆசிரியர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டோம்.

○ இன்று மாணவர்களுக்கும், ஆசிரியர் களுக்கும் பல வித வசதிகள் ஏற்பட்டுள் ளன. போக்கு வரத்துப் பிரச்சினை குறைவு அதிகளவு பாடசாலைகள் ஆங்காங்கே தோன்றியுள்ளன. போதிய இடவசதி, உபகரணங்கள், தளபாடங்கள் எல்லாம் தாராளமாகவே கிடைக்கின்றன. சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், பாடசாலைக்கு வெளியேயும் படித்து முன்னேறக் கூடிய வாய்ப்புக்கள், இப்படிப் பல வசதிகள் இருந்தும் இருசாராருமே இவைகளை முழுமையாகப் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை.

(இவ்வாறு கூறினார் திரு. சந்தியாப்பிள்ளை சவரி முத்து ஆசிரியரவர்கள். அவருக்கு எமது நன் றியைக் கூறிக் கொண்டு 1932ம் ஆண்டு முதல் 1933ம் ஆண்டுவரை ஆசிரியராகவும் 1960 முதல் 1970 வரை தலைமை ஆசிரியராகவும் பணியாற்றிய திரு. P. M. ஜோசப் அவர்களைச் சந்தித்து உரையாடினோம்.

★ தங்கள் காலப் பகுதியில் தன்னுமுனை புனித வளனார் வித்தியாலய மாணவர்களின் கல்வி வளர்ச்சி, பாடசாலை அபிவிருத்தி பற்றி கூறுவீர்களா?

○ எனது காலத்தில் மாணவர்கள் கல்வியில் வளர்ச்சி அடைந்தனர் என்றே கூறுவேன். மாணவர் தொகையும் அதிகரித்தது. கல் வியில் மட்டுமன்று, பாட்டு, பேச்சு, நடிப்பு, விளையாட்டு போன்ற பல துறைகளிலும் முன்னேற்றமடைந்தனர். எனது காலத் தில் தான் பாடசாலைக்கென்று இரண்டா வது கட்டடத் தொகுதி கட்டி முடிக்கப் பட்டது. இதற்கு மாவட்டக் கல்வித்திணைக் களமும், உடனிருந்த ஆசிரியர்களும், மாணவர்களும் ஒத்துழைத்தனர்.

இப்படிக் கூறியவரிடம் திருச்சபையின் உதவி பற்றிகேட்டபோது, தமது காலத்தில் பாடசாலை களை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்ட தால் திருச் சபையிடமிருந்து எந்தவித உதவி யும் கிடைக்கவில்லை என்று கூறினார்.

★ மாணவர்களின் கல்வி வளர்ச்சியில், தன் னுமுனைக் கிராம மக்களின் பங்களிப்பு பற்றி.........

○ தன்னுமுனைக் கிராம மக்களின் அன்றைய வாழ்க்கை நிலை மிகவும் பின் தங்கி இருந்தது. அவர்களது பிரதான தொழில் விவசாயம், கூலிவேலை போன்றவை தான். பெரும்பாலானோர் வறுமையில் வாழ்ந்த னர். இதனால் இவர்கள் தம் பிள்ளைக ளைத் தொடர்ந்து கல்வி கற்கவிடாது இடையிலேயே நிறுத்திக்கொண்டு தம் தொழிலுக்கு அவர்களையும் அழைத்துச் சென்றனர். ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்புவதில்லை. ஆனால் எல்லோரும் அப்படியல்ல. சிலர் தம் பிள்ளைகளை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்பி உயரவைத்தனர். பொதுவாகப் பெற்றோ ரின் ஒத்துழைப்புக் குறைவாகவே இருந்தது.

★ தாங்கள் தன்னுமுனையில் பணியாற்றிய காலத்தில் நெஞ்சில் நிலைத்திருப்பது...

○ நான் 1932 ம் ஆண்டு ஆசிரியப் பணிக்கு வந்தேன். என்னை இத்துறையில் ஈடுபட வைத்து உருவாக்கியவர் அருள் திரு J. டிலாகே யே. ச. அவர்கள் தான் அவரை இன்றும் நன்றியுடன் நினைக்கின் றேன். அடுத்துத் தன்னுமுனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பாடசாலையில் நான் பத்து ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்ற போது ஆசிரியர்களும், மாணவர்களும், தன்னுமுனைக் கிராமத்து மக்களும் எனக்கு அன்போடு பிரியாவிடை வைபவம் நடத்தி அனுப்பிவைத்தனர், அவர்கள் என்மீது வைத்த அன்புக்கும், மரியாதைக்கும் என்றும் நன்றி உள்ளவனுயிருக்கின்றேன்.

(நன்றி கூறி விடைபெற்றோம்)

நூருண்டு கண்ட தன்னுமுனைப் புனித வளனுர் வித்தியாலய இந்நாள் அதிபர் செல்வி G சின்னத்தம்பி அவர்களைச் சந்தித்தபோது)

○ நான் 1983ம் ஆண்டு நடுப்பகுதியில் இங்கு பொறுப்பேற்றேன். ஏறக்குறைய ஆறு வருடங்களாகின்றன. நான் வந்தபோது பாடசாலை இருந்த நிலை ஆரோக்கியமானதல்ல. இந்தப் பகுதியில் க. பொ. த. சாதாரணதரம் வரை படிக்கக் கூடிய பாடசாலையாக இது இருந்தும், தன்னுமுனையிலுள்ள வசதி படைத்தவர்கள் எல்லாம் மட்டக்களப்புக்கே சென்று படித்தார்கள். ஏனெனில் இந்தப் பாடசாலையின் கல்வித்தரத்தில் நம்பிக்கை இருக்கவில்லை. அயல் கிராமப் பிள்ளைகளும் வசதி குறைந்தவர்களுமே இங்கு படித்தவர்கள். இதைவிட படிப்பித்தலுக்குத் தேவையான உபகரணங்களோ, இடவசதிகளோ, பிறவசதிகளோ எதுவுமே இருக்கவில்லை. கல்வித் திணைக்களத்திடம் முறையிட்டும் சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை. இவைகளை எவ்வாறு பெறுவது என்று தெரியாத இயலாத நிலையே இருந்தது.

★ பாடசாலை அதிபர் என்ற முறையில் இந்தப் பிரச்சனைகளைத் தீர்க்க என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டீர்கள்?

○ பாடசாலை அபிவிருத்தி சங்கத்தைக் கூட்டி நாம் கலந்துரையாடிய பொழுது தன்னுமுனைப் பகுதிக்குக் குருவாக வந்துள்ள அருள்திரு அருளானந்தம் அவர்களை போஷகராக நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்கள். அதன்படி அருள்திரு அருளானந்தம் அவர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் போஷகரான பின் பாடசாலையின் பல அபிவிருத்திகளுக்குக் காரணமாக இருந்தார். வெளிநாடுகளிலிருந்தும், உள்நாட்டு சமூகஸ்தாபனங்களிலிருந்தும் பல உதவிகளைப்பெற்றுநூலகம், விளையாட்டு மைதானம், தண்ணீர் தாங்கி, மனையியல் பகுதி, பல்வேறு உபகரணங்களைப் பெற்று பாடசாலையின் அபிவிருத்திக்குப் பெரிய அளவில் துணைநின்ருர். நோர்வே நாட்டிலிருந்து உடைகள், பொருட்கள் போன்றவற்றைப் பெற்று கஷ்டப்படுகின்ற சிறுர்களுக்கு அளித்ததன் மூலம் அவர்கள் கல்வியில் ஆர்வத்துடன் ஈடுபட உற்சாக மூட்டினுர். இப்படிப் பலவிதங்களில் எமது பாடசாலை தற்போது வளர்ந்திருக்கிறது.

★ தற்போது பாடசாலையில் எத்தனை மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்?

○ 500 மாணவர்கள் உள்ளனர். தன்னுமுனை கிராமத்து மாணவர்களும், அயல் கிராமங்களிலுள்ள மாணவர்களும் இதில் அடங்குவர்.

★ இவர்களின் கல்வித்தரம் எப்படி உள்ளது?

○ உயர்ந்த நிலையில் உள்ளது என்று சொல்லுறேன். முன்பெல்லா க. பொ. சாதாரண தரம் வரை வகுப்புக்கள் இருந்தும் மாணவர் பரீட்சைக்குத் தோற்றத் தகுதியில்லாமல் இருந்தார்கள். இப்போது க. பொ. த. உயர்தரம் பயிலக்கூடிய தகுதியில் உள்ளனர். இதனுல் உயர்தர வகுப்புக்களை நடாத்தக் கல்வித்திணைக்களத்திடம் அனுமதி கோரியுள்ளோம்.

எமது பகுதியில் ஏற்பட்ட பல அசம்பாவிதங்களின் போது பாடசாலை பெருமளவில் பாதிக்கப்பட்டது. மாதக்கணக்காகப் பாடசாலை இயங்கவே முடியவில்லை. இத்தகைய தடைகள் இல்லாமலிருந்திருந்தால் இன்னும் எவ்வளவோ முன்னேற்றங்களை எமது பாடசாலை கண்டிருக்கும்.

★ பாடசாலையைப்பொறுத்தமட்டில் உங்கள் எதிர்காலத் திட்டங்களென்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

○ நாம் எவ்வளவோ முன்னேற்றங்களைக் கொண்டிருந்தாலும் எல்லாவற்றிலும் நிறைவடைந்து விட்டோம் என்று சொல்வதற்கில்லை. வளர வளரப் புதிய தேவைகளும் வளருகின்றன.

15 ஆசிரியர்களை உள்ள எமது பாடசாலைக்கு இன்னும் மேலதிக ஆசிரியர்கள் தேவையாக உள்ளது.

மாணவர்கள் தொகை கூடியுள்ளதால் இடவசதி போதாமலுள்ளது. இவைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

இப்பாடசாலையைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள பாடசாலைகள் கனிஷ்ட பாடசாலையாக இருப்பதால் இதனை உயர்தர பாடசாலை ஆக்க வேண்டும். அதற்கு உரியதகுதி இதற்குண்டு. இதனால் எல்லோரும் நகரப் பாடசாலைகளைத் தேடி ஓடாமல் சுலபமாகக் கல்விகற்க உதவியாயிருக்கும். அடுத்துத் தன்னுமுனையும், அதைச் சுற்றியுள்ள இடங்களும் விவசாயப்பகுதிகளாயிருப்பதால் தொழில் முன்னிலைப் பாடங்கள் இங்கு கற்பிக்கப்பட வேண்டும். அத்துடன் இவ்வாறு தொழில் பயிலும் மாணவர்கள் அதனைப்பயன்படுத்தச் சிறிய அளவிலான தொழிற் பேட்டைகள் உருவாக வேண்டும். இதனால் காலங்காலமாக வறுமையில் வாடும் இப்பகுதி மக்கள் வளம்பெற வாய்ப்புண்டு. எமது பாடசாலையின் பாதுகாவலர் புனிதவளன் அவரை ஒரு 'நீதிமானாக' விவிலியம் காட்டுவதால், நீதிமானாக, என்றசொல்லை விருது வாக்காகக் கொண்டுள்ளோம். அதற்கேற்ப கல்வியின் மூலமாக எமது மாணவர்கள் ஒவ்வொருவரும் சிறந்த மனிதர்களாக உருவாக வேண்டும் என்பது எமது நோக்கம். இதற்கேற்ப கல்வியிலும் ஆன்மீக வளர்ச்சியிலும் எமது மாணவர்களுக்கு ஊக்கம் கொடுக்கிறோம்.

★ நகரப்பாடசாலைகளை விட, கிராமத்துப் பாடசாலைகள் மக்களோடு கூடிய தொடர்புடையன. இந்த வகையில் உங்கள் பாடசாலை கிராமத்தில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

○ முன்பெல்லாம் படித்து முன்னேறலாம் என்ற நம்பிக்கை மக்களுக்குப் பெரிய அளவில் இருக்கவில்லை. பிள்ளைகளை இடையில் நிறுத்திவிட்டுத் தமது தொழிலுக்கு அழைத்துச் சென்று விடுவார்கள். இப்போது அப்படியில்லை. இறுதிவரை படித்து முன்னேறலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. பிள்ளைகளை ஆர்வமுடன் பாடசாலைக்கு அனுப்புகிறார்கள். இது ஒரு பெரிய மாற்றம் என்று எண்ணுகிறேன்.

★ உங்கள் பாடசாலை நூறாண்டு கண்டிருப்பது பெருமைக்குரியது. நூற்றாண்டு விழாவை எப்படிக் கொண்டாடவிருக்கிறீர்கள்

○ நூற்றாண்டு விழாவுக்காக ஆசிரியர்கள், பாடசாலை அனுதாபிகள், ஆதரவாளரைக் கொண்ட குழுவொன்றை அமைத்துள்ளோம். இந்தக்குழு விழாவிற்கான ஒழுங்குகளைக் கவனிக்கிறது. நூற்றாண்டு விழாவையொட்டிப் பெரிய அளவிலான விழா மலர் ஒன்றை வெளியிட எண்ணியுள்ளோம். அத்துடன் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்படுகின்றன. இவ்வாண்டு இறுதிக்குள் விழா நடைபெறும்.

நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற எமது வாழ்துக்களைத் தெரிவித்துவிட்டு விடை பெற்றோம். நூறாண்டு கண்டுள்ள தன்னுமுனை புனித வளனார் வித்தியாலயம் தனது வயதுக்கேற்ப போதிய வளர்ச்சி பெறவில்லை என்பது பலரது ஆதங்கமாகவும் இருப்பது தெரிகிறது. இப்பாடசாலைக்கு வித்திட்ட கத்தோலிக்க ஆயர் பேரருட்திரு பொன்ஜியன் ஆண்டகையின் கனவு எந்த அளவு நனவாகி இருக்கிறது, நிறைவு கண்டிருக்கிறது என்பது கேள்விக்குரியது. இதன் வளர்ச்சிக்கும், தளர்ச்சிக்கும் நூறாண்டுகளாகத் தொடர்பு கொண்டிருந்த ஆசிரியர்கள், மாணவர்கள், நிர்வாகிகள் அனைவருமே பொறுப்பேற்கவேண்டும். வருங்காலமாவது வளனார் வித்தியாலய வரலாற்றில் பொற்காலமொன்றை உருவாக்கும் என்று நம்புவோம்

பேட்டித் தொகுப்பு
**எம். வி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விவிலியப் புதிர் - 14

இஸ்ராயேல் மக்கள் தங்களைச் சூழ்ந்திருந்த நாடுகளில் அரசர்கள் மக்களை ஆண்டு நடத்துவதைக் கண்டு தங்களுக்கும் அத்தகைய அரசன் ஒருவன் இருக்க வேண்டுமென விரும்பினர். அவர்களது விருப்பத்திற்கிணங்கி இறைவனும் அவர்களை வழி நடத்த பல அரசர்களை ஏற்படுத்தினுர். அரசர்களின் ஆட்சியைப் பற்றிக் கூறுவதுதான் சாமுவேல் ஆகமம், அரசர் ஆகமம் போன்ற நூல்களாகும். அரசர்கள், அவர்களோடு சம்பந்தப் பட்டவர்கள் பற்றிய உங்கள் அறிவை எடைபோட இதோ ஒரு புதிர்.

1. ஆண்டவனுக்கு முதன் முதலில் அழகியதோர் ஆலயம் அமைத்தவர்.

..........................................................

2. தன் வாளைத் தரையில் குத்தித் தாஞகவே அதன் மேல் விழுந்து இறந்தவர்.

..........................................................

3. தன் சகோதரியைக் கற்பழித்தவன்..........................................................

4. ஆலயத்தைக் கட்ட வேண்டாம் எனத் தாவீதை எச்சரித்தவர்.

..........................................................

5. கல், கவண் என்பவற்ருல் கொல்லப்பட்ட வீரன்.

..........................................................

6. காணிக்கை அப்பங்களை எடுத்துத் தாவீதுக்குக் கொடுத்தவர்.

..........................................................

7. தாவீது பாவத்தில் விழக் காரணமாக இருந்தவன்.

..........................................................

8. தாவீதுக்கு ஆபத்தில் உதவிய நண்பன்..........................................................

9. இவள் மூலம் சவுல் தாவீதுக்கு மாமஞராஞர்.

..........................................................

10. இசாயியின் எட்டாவது புதல்வன்..........................................................

பெயர்:..........................................................

முகவரி:..........................................................

..........................................................

**பரிசு: ரூபா 50/-, 25/-** **முடிவுத் திகதி: 30 - 10 - 1989**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## விவிலியப் புதிர் 12
## முடிவுகள்

1. சாம்சன்
2. கெதயோன்
3. சாம்கார்
4. ஜெப்தே
5. ஆவோத்
6. அபிமெலக்
7. யாயீர்
8. தெபோரு
9. அபேசான்
10. ஒத்தோனியேல் - கெதயோன்

### பரிசு பெறுவோர்

**1ம் பரிசு**

**திரு. K. D. மோகனதாஸ்**
*53/5, சென்ற் பீற்றர்ஸ் பிளேஸ்*
*பம்பலப்பிட்டி, கொழும்பு.*

**2ம் பரிசு**

**G. அல்பேட்**
*புனித லூர்து அன்னை ஆலயம்*
*பாலையூற்று, திருகோணமலை.*

### பாராட்டுப் பெறுவோர்

1. **சித்தா - சுப்பிரமணியம்**
*90, பயனியர் வீதி, மட்டக்களப்பு.*
2. **செல்வி அ. ஸ்ரெலா பாரதி**
B. L/47 5வது அவெனியூ, அம்பாறை.
3. **யோசப் றேசறி**
*வீச்சுக் கல்முனை, மட்டக்களப்பு.*
4. **திரு. A. லோறன்ஸ்**
*9, மணி ஒழுங்கை*
*ஊறணி, மட்டக்களப்பு.*
5. **அ. மேரிதிரேஸ்**
*20, கோணேசபுரம்*
*உவர் மலை, திருகோணமலை.*

*பங்குபற்றியவர்கள் 62*
*சரியான விடை அளித்தோர் 51*

*அனைவருக்கும் எமது நன்றி*

**குறிப்பு :** விடைகள் போட்டிக் கூப்பனில் நிரப்பி அனுப்பப்பட்டால் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படும். ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம். **(ஆ. ர்.)**

### அமலமரித் தியாகிகள் சபை அதிபரின் வருகையும் வரவேற்பு உபசாரமும்

கடந்த 19 - 8 - 89 சனியன்று பி. ப. 2:00 மணியளவில் பாலையூற்று புனித லூர்து அன்னை தேவாலயத்தின் முன்றலிலே கத்தோலிக்க மக்கள் முகம் மலர்ந்த சிரிப்பினூடே புடை சூழ இன்று உலகத்தின் 90 நாடுகளில் குருத்துவத் தொண்டாற்றுகின்ற அமலமரித் தியாகிகள் சபையைச் சார்ந்த சுமார் ஆறுயிரம் அருட்தந்தையர்களுக்கு அதிபராக இருக்கின்றவரும், உரோமாபுரியிலே பணியாற்றுகின்றவருமான பேரருட்பெருந்தகை மார்சல்லோ சாசோ O. M. I. அவர்கள் இலங்கையில் அ. ம. தி. சபையின் மாகாண அதிபராக விளங்குகின்ற அருட்திரு அன்செலம் சில்வா O. M. I. அனுராதபுரத்தின் உதவிப் பங்குக் குருவான அருட்திரு றேகான் O. M. I. ஆகியோர் சகிதம் வருகை தந்தவருக்கு மலர்மாலை அணிவித்து, மக்கள் பவனிவர தமிழ்க் கலாசார முறைப்படி நங்கையர் இருவரின் ஆராத்தியோடு சந்தன, குங்குமத் திலகமிடப்பட்டு வரவேற்கப்பட்டார்.

தொடர்ந்து பங்குத்தந்தை அருட்திரு A. F. மார்சலின் O. M. I. அவர்களினால் வரவேற்புரையும், சபையின் ஆரம்ப வரலாறு பற்றிய விளக்கவுரையும் நிகழ்த்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து பாலையூற்று மெய்ப்புப் பணிச் சபையின் சார்பிலே திரு. G. A. பிரான்சிஸ் அவர்கள் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்ற, திரு. J. சிங்கராஜா, திருமதி N. மெற்றில்டா அவர்களினால் அன்பளிப்புகள் வழங்கி கௌரவிக்கப்பட்ட அ. ம. தி. சபை மாஅதிபர் அவர்கள் தமதுரையை ஆங்கிலத்தில் நிகழ்த்தி நற்கருணை ஆசீர்வாதத்தையும் வழங்கினார்.

நிறைவான ஆசீரோடும் மகிழ்வான கைகுலுக்களோடும் நிறைவு பெற்ற இவ் வரவேற்பு வைபவமானது பாலையூற்றுப் பங்கு அமல மரித்தியாகிகள் சபையின் நிருவாகத்தின் கீழ் கையளிக்கப்பட்ட பத்தாவது ஆண்டு நிறைவு விழாவாகவும் கருதப்படுகின்றது.

தகவல்:- G. அல்பேட் - பாலையூற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உங்கள் பக்கம்

## நல்ல அடி

ஆவணி மாதத் தொண்டனில் வெளிவந்த 'கல்லறை மௌனங்கள்' சிறுகதை மிகவும் நன்று. பிள்ளைகளின் விருப்பு, வெறுப்புகளுக்கு மதிப்பளிக்காத பெற்றோருக்கு நல்ல சாட்டை அடி.

**இ. யோகேஸ்வரி**
சொறிக்கல்முனை.

## வண்டு மணியே வருக! வருக!

வாயாடி வண்டுமணி வலம் வருவதில் மிக்க மகிழ்ச்சி. தொடர்ந்து எதிர்பார்க்கின்றோம்.

**எம். எல். சுதா**
மட்டுநகர்.

## தூண்டுகிறது

விவிலியப் புதிர் போட்டி உண்மையிலேயே மிகவும் பயன் உள்ளது. இதன் மூலம் தொண்டன், வேதாகமத்தை வாசிக்கப் பலருக்குத் தூண்டுகோலாக உள்ளான்.

**செல்வி அ. ஸ்ரெலா பாரதி**
அம்பாறை.

## வெகுஜோர்

நெல்சன் மண்டேலா பற்றிய கவிதை வெகுஜோர். கவிதை படைத்த நிலா தமிழின் தாசன் அவர்களுக்கு பாராட்டுக்கள்.

**ஜே. அருளப்பு**
தாழங்குடா.

## ஆஹா! நன்று

அமரத்துவம் அடைந்த தமிழ் இனத் தளபதியின் உருவப்படத்தை முன்பக்கத்தில் பிரசுரித்துத் தமிழ் மக்களின் உள்ளத்திலே நிரந்தர மதிப்பைப் பெற்றுவிட்டாயே!

**அ. அமலன் தினேஷ்குமார்**
காத்தான்குடி.

## வேதனைத் தீ

ஆகஸ்ட் தொண்டனில் இடம் பெற்ற எருவில் மூர்த்தி அவர்களின் 'அழுகின்றோம் யாம்' கவிதை கண்டு வேதனையில் வேகுகின்றோம்.

**செல்வி றெசற் ரெலாரன்ஸ்**
கூளாவடி, மட்டக்களப்பு.

## சிந்திக்க வேண்டுகிறேன்

ஓகஸ்ட் மாதத் தொண்டனில் இடம் பெற்ற 'குடியிலிருந்து மீள வழி உண்டா' என்ற கட்டுரை பல ஆண்களை சிந்திக்கவும், பின்பற்றவும் வைத்திருக்கும்.

**செல்வி. லதா**
பாலையூற்று

## கண்படுமே!

தொண்டனே உனக்கு கண்ணூற்றுப் போடவேண்டும். உன்னில் வெளியாகும் ஒவ்வொரு அம்சங்களும் தேனாக இனிக்கின்றது.

**செல்வி. தர்ஷினி**
பாலையூற்று.

## தொட்டது

ஒகஸ்ற் மாத இதழின் விடயங்கள் யாவும் சிறப்பாக அமைந்திருந்தன. தமிழ் தலைவர்களுக்கான அஞ்சலிக் கவிதை என் மனதைத் தொட்டது. 'கல்லறை மௌனங்கள்' உண்மைக் கதையாக மிளிர்ந்தது.

**ஜே. தீபன் சொய்சா**
வங்காலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Registered as a News Paper inSri Lanka.

# காற்றில் கலந்து வரும்

நாள்; 01 - 10 - 89
நேரம்: மாலை 7:00 மணி

**புதிய உலகம்**

- புது உபதேசம் (சிறுகதை)
- விவிலியப் போட்டி

★

நாள்: 7, 8, 9, - 10 - 89
நேரம்: காலை 5:50 மணி

**கத்தோலிக்க நற்சிந்தனை**

வழங்குபவர்: அருள்திரு. அம்புரோஸ்

★

நாள்; 10 - 10 - 89
நேரம்; மாலை 6:45 மணி

**சிறுவர் உலகம்**

- ஆணும் பெண்ணுமாக (விவிலிய நாடகம்)
  எழுதியவர்: கலைமணி

★

நாள்; 15 - 10 - 89
நேரம்: மாலை 7:00 மணி

**புதிய உலகம்**

- நற்செய்தி அறிவிப்பு-சிறப்புரை
  வழங்குபவர்: அருள்திரு. கிங்ஸ்லி ரொபட்
- முரண்பாடுகள் (நாடகம்)
  எழுதியவர்; திருமதி அகுஸ்தீன்

நாள்: 21, 22, 23 - 10 - 89
நேரம்: காலை 5:50 மணி

**கத்தோலிக்க நற்சிந்தனை**

வழங்குபவர்; அருள்திரு. பி. ஜோசப்

★

நாள்: 24 - 10 - 89
நேரம்: 6;45 மணி

**சிறுவர் உலகம்**

★

நாள்: 29 - 10 - 89
நேரம்; மாலை 7-00 மணி

**புதிய உலகம்**

- மனிதன் நினைப்பதுண்டு (நாடகம்)
  எழுதியவர்: எஸ். ஜெயராஜா

நிகழ்ச்சித் தொகுப்பு:
மலர்வேந்தன்

நேயர்களே! நிகழ்ச்சிகளைக் கேட்டு, உங்கள் கருத்துக்களைச் சொல்ல மறவாதீர்கள்.

தொடர்பு:
இணைப்பாளர்,
கத்தோலிக்க வானொலி
நிகழ்ச்சிகள் (தமிழ்)
அ. பெ. எண் 44,
மட்டக்களப்பு.

இச்சஞ்சிகை மட்டக்களப்பு, புனித செபஸ்தியார் அச்சகத்தில் அச்சிட்டு தொண்டன் ஆசிரியர் குழுவினரால் 20 - 09 - 89ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media